# தாயக ஒலி

THAYAKA OLI

இரு திங்கள் ஏடு 9




தை - மாசி 2014

விலை ரூபா 60/=


Thaipongal Mega Sale
தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
RATHY
Jewellers | Tooting
209 Upper Tooting Road, Tooting SW17 7TG
T: 020 8682 2233
F: 020 8767 7600
E: rathyjewellers@hotmail.co.uk
28 Ealing Road, Wembley Middx HA0 4TL
T: 020 8903 3063

# நாங்களும்! நீங்களும்!

உங்கள் ஆதரவு இமயம் என்றால்
எங்கள் சேவை இமயத்தின் சிகரம். ஏ-லங்கா ரவல்

**விமானப்பயணிகள் பொதுவாகக் கவனிக்கவேண்டிய முக்கிய விடயங்கள்**

- கடவுச் சீட்டுகளும் கட்டுப்பாடுகளும் ✓
- விசா விபரங்களும் விதிமுறைகளும் ✓
- பிரயாணிகளின் வயதெல்லைகளும் வசதிகளும் ✓
- சிசு-சிறுவர்களும் சின்ன சின்ன விடயங்களும் ✓
- இடைநிறுத்தல்களும் அவகாச நேரங்களும் ✓
- தரிப்பிடங்களும் தங்குமிட வசதிகளும் ✓
- பொதிகளின் அளவுகளும் பொருத்தங்களும் ✓
- முதியவர்களும் முக்கியமான தேவைகளும் ✓
- திகதி மாற்றங்களும் தில்லுமுல்லுக்களும் ✓
- தொப்புள்கொடி உறவுகளும் தொடர்பான சேவைகளும் ✓
- தாயக தகவல்களும் தகுந்த ஆலோசனைகளும் ✓
- உலகளாவிய உலாத்தல்களும் உத்தரவாதங்களும் ✓
- இரத்து செய்தலும் கழிவுக்கொடுப்பனவுகளும் ✓
- பிரயாணத்தின் இலவச நீட்டல்களும் குறுக்கல்களும் ✓

**உங்கள் தேவைகள் எமது சேவைகள் 100 %**

1. நிதானமான வழிநடத்தல்
2. நியாயமான விலைகள்
3. பொருத்தமான ஆலோசனைகள்
4. சிநேகபூர்வமான சேவைகள்
5. இனிய தமிழில் இலகுவான கலந்துரையாடல்




சேவையே எமது சிந்தனை

ஏ-லங்கா ரவல், ஏரோ லங்காவின் (யாழ்ப்பாண சேவை) பிரித்தானியாவின் ஏக முகவர்.



**A-Lanka Travel Ltd**

*We make it easy to take it easy*

TOOTING BROADWAY

171 Tooting High Street, Tooting, London SW17 0SZ

**020 8672 5551, 020 8672 2010**

# Easan & CO

*Chartered Management Accountants*

## Specialists in arranging Commercial Loans

- Self Assessment Tax Return
- ĆIS Refunds
- Accounts & Book Keeping
- VAT Returns
- PAYE
- Management Accounting



S.Eswaranathan ACMA
(Easan)

196 Merton High Street
South Wimbledon
London SW19 1AX

Tel: 020 8543 8484
Fax : 020 8540 0107
Mobile : 07801227017




## Sidthargal Medical Clinic & Medical College (Alternative Medicines)

**Natural Family Doctor**

**Diabetics**

**Skin Disease**

**Heart Disease**

**Cancer**

**Back Pain**

**Sinus**

**Nerves Problems**

**Arthritis**

**Massage**

**Infertility**

**Weight Loss**

**Weight Gain**

**Autism**

**Asthma (Completely curable)**

**Foot Problems**

**Any other problems or disease**

**Prof. Dr. SIR Navaratnalingam Vivekanantha MD PhD**
221 Dunsfoldway New Addington, Croydon CR0 0TR
Branch : 54,High Street Colliers wood, London SW19 2BY
M: 075 380 78 778 E: navaviveks@live.co.uk

21 வருட கால அனுபவம்

# Linga & Co

அனைவருக்கும்
எமது உள்ளங்கனிந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!

## Legal Advisors & Immigration Specialists

## We Specialise in:



- Asylum and Immigration Matters
- Human Rights applications
- Appeals
- Detention and Bail
- Entry Clearance Application and Appeal
- Injunctions & Judicial Reviews through associate solicitors
- Work Permits
- EEA Application (Sponsor)
- Student Visa, Visitor's Visa
- Highly Skilled Migration Programme
- Naturalisation Applications

**V.P.Lingajothy**
LLB(Hons), M.Sc., Dip Fms, ACILEX
Principal
immigration Specialist
E-mail: MRLINGA@AOL.COM

ஐரோப்பிய மனித உரிமைகள்
சட்டம் சார்பாக தகுந்த
ஆலோசனைகளை இப்போது
நாங்கள் வழங்குகிறோம்.

நீங்கள் அல்லது உங்கள் உறவினர் இங்கிலாந்திற்கு 2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் வந்துள்ளார்களாயின் உடன் தொடர்பு கொள்ளவும்.

**மிகவும் நம்பிக்கையான வெற்றிகரமான நிறுவனம்**

General Line : 020 8544 9285
Fax : 020 8542 9530

46, High Street
Colliers wood
London SW19 2BY

OISC

**Emergency Line : 07771 646 441**

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

# 'தாயக ஒலி'

(தாயக மண்ணின் தனித்துவம் காக்கும் இருதிங்கள் ஏடு)

வள்ளுவர் ஆண்டு 2044 | தை -மாசி 2014 | வில் - 02 | ஒலி - 09

**இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும்**
**இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும்**
**இணைந்து வெளியிடும்**

**'தாயக ஒலி'**

**பிரதம ஆசிரியர்**
த.சிவசுப்பிரமணியம் [தம்பு சிவா]
தொலைபேசி : 0094(0)718676482

**துணை ஆசிரியர்கள்**
தாயகன் [இலண்டன்]
சி.பவன் [இலங்கை]

**மதியுரைக் குழு**
பேராசிரியர் சபா ஜெயராசா
சைவப்புலவர் சு.செல்லத்துரை
எஸ்.ஈஸ்வரநாதன் [இலண்டன்]
வைத்திய கலாநிதி தாஸிம் அகமது

**சஞ்சிகைக் குழு**
மூ.சிவலிங்கம்
கா.வைத்தீஸ்வரன்
ஏ.ஸ்ரீபதி [இலண்டன்]

**வெளிநாட்டுப் பிரதிநிதிகள்:**
கனடா : முருகேசு கிருபாகரன்
து.நடராஜா
இலண்டன் : சி.அமிர்தலிங்கம்
அமெரிக்கா : வே.பிரேமதயாளன்

**ஐரோப்பிய நாடுகளுக்கான**
**விசேட ஒருங்கிணைப்பாளர்**
திருமலை பாலா
தொ.பேசி : 0044 (0)7956486014

**தொடர்பு :**
9-2/1, நெல்சன் இடம்,
கொழும்பு - 06, இலங்கை.
தொ.பேசி : 0094(0)112364124

**E-Mail : thayakaoli@gmail.com**

தாயக ஒலியில் இடம்பெறும் படைப்புகளுக்குப் படைப்பாளிகளே பொறுப்புடையவர்கள். ஆக்கங்கள் ஆசிரியரின் அவதானிப்புடன் பிரசுரமாகும்.

**-ஆசிரியர்-**

இணுவில் ஒலி, **'தாயக ஒலி'** என்னும் புதிய நாமம் தாங்கி வெளிவருகின்றது.

## உள்ளே ஒலிப்பவை

பக்கம்

பேனா முனையிலிருந்து..... 02

**கட்டுரை :**
- கட்டுரை இலக்கியம் 04
- நெஞ்சோடு போராடுவோம் 06
- பாரதியின் பெண்ணியக் கருத்து 08
- பின்நவீனந்துவத்தின் வீழ்ச்சி 17
- முதன்மை பெற்றது வில்லிசை 20

**சிறுகதை :**
- 'பறிப்பும் முறிப்பும்' 12

**கவிதை:**
- பொங்குக பொங்கல் 03
- கவிதைகள் சுவைப்போம் 27

**இலக்கியம்:**
- இலக்கியம் எதைச் சொல்லவேண்டும் 19

**சித்தனை விருந்து :**
- கல்வியின் முக்கியத்துவம் 11
- மார்ச்சிய உளவியல் 24
- சீனாவில் தாய்ப்பால் மோகம் 25

**ஆய்வுரை :**
- இணுவில் ஒலி அறிமுக விழா 28
- இணையிலி 38

**பரிசுக்கட்டுரை:**
- இயற்கை வளங்களைப் பாதுகாப்போம் 36

**உங்கள் விருந்து :** 30

**ஏனையவை :**
- கௌரவம் பெற்ற வவுனியூர் இரா. உதயணன் 16
- விருதுபெற்ற எழுத்தாளர் 26
- தமிழவேளின் கடிதம் 31
- கண்ணகி கலை இலக்கிய விழா 33
- பேராசிரியர் க.கைலாசபதி 37

**அட்டையில் .....**

அரங்கேற்றம் கண்ட
அபிநயசுந்தரி லக்ஷ்மி ரஞ்சன்
[இலண்டன்]

## பேனா முனையிலிருந்து .....

நாட்டின் பல பாகங்களிலும் இடம்பெறும் வீதி விபத்துக்களால் பெறுமதி வாய்ந்த பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டு வருகின்ற சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. அப்பாவிப் பொதுமக்கள், வயோ திபர்கள், பெண்கள், பாடசாலைப் பிள்ளைகள் என்று எல்லாத் தரப்பினருமே படுகாயங்களுக்கு உள்ளாகி அங்கங்களை இழந்தும், உயிரைப் பறிகொடுத்தும் வருகின்ற அசாதாரண நிலை தினம் தினம் அரங்கேறிக் கொண்டிருப்பது வேதனை தரும் விடயமாகும்.

வாகனங்களைச் செலுத்துபவர்களின் அவதானமின்மையும், பாதசாரிகளின் கவனமின்மையும் விபத்துக்கள் ஏற்படக் காரணமாகின்றன. பொதுவாக எல்லோருமே வீதி ஒழுங்குகளை முறையாகப் பேணாமையே விபத்துக்கள் ஏற்படக் காரணமாக அமைகின்றது. வாகனங்களை ஓட்டுபவர்கள் நிதானத்தை இழந்த நிலையில் பாதசாரிகளை மட்டுமன்றி, வீதியோர வீடுகளுக்குள்ளும் வியாபார நிலையங்களுக்குள்ளும் இருப்பவர்களையும், அவர்களது உடைமைகளையும் சேதப்படுத்திய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. குடிபோதையில் வாகனங்களை ஓட்டுதல், வேகக் கட்டுப்பாட்டை மீறுதல், வாகனம் செலுத்தும்போது கையடக்கத் தொலைபேசியில் உரையாடுதல், வேகமாகப் போகும் வாகனத்தை முந்த வேண்டும் என்று மிக வேகமாக வாகனத்தைச் செலுத்துதல், மனப்பதற்றம், வேதனை என்பவற்றால் நிலைகுலைந்த மன நிலையில் வாகனத்தை ஓட்டுதல், வாகன முன் ஆசனத்தில் இருக்கும் ஆணோ பெண்ணோ தங்களை மறந்து உணர்ச்சி வசப்பட்டவர்களாக இருக்கும் நிலையில் வாகனத்தை ஓட்டுதல் என்பனவும் தவிர்க்கப்பட வேண்டும்.

மேலும் சமிக்ஞை விளக்குகள், பாதையைக் கடக்கும் மஞ்சள் கோடுகள், வீதி ஓரங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் எச்சரிக்கைப் பதாதைகள் என்பவற்றைக் கவனியாது வாகனத்தை ஓட்டுதல், மற்றும் ஓய்வின்றித் தொடர்ந்து நித்திரை விழித்து வாகனத்தைச் செலுத்துதல், அளவுக்கதிமான பிரயாணிகளை வாகனங்களில் ஏற்றிச் செல்லல், வாகனங்களின் மிதி பலகைகளில் நின்று பயணம் செய்தல், வீதிகளில் நடந்து செல்லும் பாதசாரிகள் கைத்தொலைபேசியில் பேசிக்கொண்டு அவதானமின்றி வீதியைக் கடத்தல் போன்ற இன்னோரன்ன காரணங்களாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இவை மட்டுமன்றி பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளைக் கடக்கும் போதும், கடலிலோ அல்லது ஆறுகளிலோ வள்ளங்களில் பயணிப்பவர்கள் உயிர்காப்பு அங்கிகளை அணிவதைத் தவிர்ப்பதாலும் விபத்துக்கள் ஏற்பட்டு உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. பொதுவாக எல்லோரும் **'அவதானத்துடன் செயற்படுதல்'** என்ற நிலையில் வரம்பை மீறாமல் அன்றாடக் கருமங்களைப் பொறுப்புடன் ஆற்றுவார்களானால் பொரும்பாலான விபத்துக்களைத் தவிர்க்க முடியும்.

ஆசனப் பட்டிகளைப் (பெலிற்) போடாமலும், தலைக்கவசம் (கெல்மட்) அணியாமலும் வாகனங்களில் பயணிப்பது தண்டனைக்குரிய குற்றமாக இருக்கின்ற போதிலும், அதை மீறிச் செயற்படுபவர்கள் விபத்துக்களை எதிர்கொள்ளும்போது பாரிய அனர்த்தங்களையும், உயிரிழப்புக்களையும் எதிர்நோக்குகின்றனர்.

விலை மதிப்பற்ற மனித உயிர்கள் விபத்துக்களால் இழக்க நேரிடுவதைத் தடுக்க எல்லோருக்கும் விழிப்புணர்ச்சியை ஊட்ட வேண்டியது மிக மிக அவசியம்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம். - **ஆசிரியர்.**

# பொங்குக பொங்கல்!
# பொங்கலோ பொங்கல்!!



லண்டன் பொன். பாலசுந்தரம்

வானமும் பூமியும்
வளம்பல தருக
ஞானமும் கல்வியும்
நலத்துடன் பெருக
தானமும் தவமும்
தவநிலைப் பக்தியும்
இனமும் சனமும்
இன்பமாய் வாழவும்
இனியவை எல்லாம்
நனி சிறந்திடவும்
பொங்கட்டும் பொங்கல்!
பொங்குக பொங்கல்!!

மனைகள் சிறக்கவும்
மங்கலம் பொங்கவும்
உயர்ந்த எண்ணங்கள்
உள்ளத்தில் வளரவும்
இல்லற வாழ்வில்
நல்லறம் பெருகவும்
இணைந்த குடும்பங்கள்
பிணைந்து வாழவும்
வான நீரில்
வயலவன் விதைத்த
நவ தானியங்கள்
பொலிவாய் விளைந்து
எல்லா மக்களும்
நல்லாய் வாழவும்
பொங்கட்டும் பொங்கல்!
பொங்கலோ பொங்கல்!!



உழவும் தொழிலும்
உயிரினம் காக்கவும்
அளவிலாச் செல்வம்
அருவிபோல் பெருகவும்
ஆவினப் பழங்குடி
மேவின பால்மடி
ஆறாய்ப் பெருகி
மழலைகள் மலர்ந்திட
வீரிய இளைஞர்
வித்தக முதியோர்
சத்துடன் வாழ
பொங்கட்டும் பொங்கல்!
பொங்கலோ பொங்கல்!!

காப்பியம் படைப்போர்
யாப்புக்கள் கோர்ப்போர்
கவிகள் யாத்து
புவிதனைத் திருத்தி
சரித்திரம் படைத்தும்
மருத்துவச் சாதனை
மக்களைச் சேரவும்
குருத்துவம் பட்டி
தொட்டியில் வளரவும்
பொங்கட்டும் பொங்கல்!
பொங்கலோ பொங்கல்!!

இஞ்சியும் மஞ்சளும்
இணைவதைப் போலவும்
பாலும் பாகும்
அணைவதைப் போலவும்
பானை பால் அரிசியின்
உறவைப் போலவும்
மாவிலை தோரணம்
மலர்வதைப் போலவும்
மழலைகள் பட்டாடையில்
மகிழ்வதைப் போலவும்
கரும்பாக வந்து
விருந்தாக நிற்பாய்
பொங்கட்டும் பொங்கல்!
பொங்கலோ பொங்கல்!!

கட்டுரை

# கட்டுரை இலக்கியம்

தமிழில் அதிகம் ஆராயப்படாத துறையாக இருப்பது கட்டுரை வடிவமும் கட்டுரை இலக்கியமும்தான். அதேவேளை சமகாலத் தொடர்பாடலில் அதிகம் விரவி நிற்பதும் கட்டுரையாக்கம்தான். கவிதைக்கும் கட்டுரைக்குமிடையே அமைப்பியல் வீச்சில் ஒப்புமை காணப்படுகின்றது. கவிதையின் ஒரெல்லையில் முற்றிலும் இறுகிய இசைக்கட்டுமானங்களுக்கு உட் பட்ட 'கிருதி' வடிவமும் மறு எல்லை முனைவில் வசனவடிவம் ஓங்கிய நிலையுமான நீண்ட அமைப்பியல் வீச்சும் காணப்படுகின்றது. கட்டுரை அமைப்பியலில் ஒரு முனைவில் முற்றிலும் அகவயப் பாங்கான அமைப் பும் (இலக்கிய நடையும் ) மறு முனைவில் கறாரான புறவயப்பாங்கான அமைப்பும் (அறிவியல் நடையும் ) காணப்படும் பண்புகள் நீண்ட வீச்சை வெளிப்படுத்துகின்றன.

அகவயம் (SUBJECTIVITY), புறவயம் (OBJECTIVITY) என்று பாகுபடுத்தல் கூட்டு மொத்தப்படுத்தலாக மாற்றப்பட்டு முழு நிறைவு கொண்ட எண்ணக் கருக்களாக சிலாகிக்கப்படும் பொழுது அவை பெரும் கருத்தாடல்களாக மேலெழுகின்றன. அங்கு அறிவின் பகிர்வுப் பண்புகள் மேலோங்க ஒடுக்கற் பண்புகள் பின்னே தள்ளப்பட்டுவிடும் நிலை ஏற்படுகின்றது. கட்டுரை இலக்கியத்தை ஆராயும்பொழுது முதலில் இதனைக் கருத்திலே கொள்ள வேண்டியுள்ளது.

'இலக்கியம் என்பது காலவோட்டத்தில் மாறுநிலை பெற்ற எண்ணக் கருவாகிவிட்டது. கறாரான விஞ்ஞான நடையில் எழுதப்பட்ட கட்டுரைகள் 'விஞ்ஞான இலக்கியம்' என்று அழைக்கப்படும் மரபு உலகளாவிய நடைமுறையாகவுள்ளது. படைப்பாக்க மறுமலர்ச்சி (CREATIVITY) என்ற உளவியற் செயற்பாடு கலையாக்கங்களுக்கும் அடிப்படையானது. அதேவேளை விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களுக்கும் அடிப்படையானது. மேலே குறிப்பிட்ட அகவயச் செயற்பாட்டுக்கும் அடிப்படையானது. அதேவேளை புறவயச் செயற்பாட்டுக்கும் அடிப்படையானது. இந்நிலையில் மரபுவழி 'எல்லைப்படுத்தலை' ஊடறுத்துச் செல்லக்கூடிய ஆற்றல் மிகு வடிவமாகக் கட்டுரை அமைகின்றது.

**எழுத்தாளர் தம்பு சிவாவின் 'முற்போக்கு இலக்கியச் செம்மல்கள்' என்ற நூலுக்கு பேராசிரியர் சபா ஜெயராசா எழுதிய அணிந்துரையின் சீரிய சொற்கோர்வை**

மானிடம் கண்டறிந்த அறிவுத் தேட்டங்களைச் சமூகப்படுத்தலுக்கு (SOCIALITY) இட்டுச் செல்வது கட்டுரை வடிவம்தான். கலைஞருக்குரிய உந்துதலையும், விஞ்ஞானிக்குரிய பொறுப்புணர்ச்சியையும் ஒருங்கே இணைத்து நிற்பது கடடுரை வடிவம்தான். கட்டுரையில் உள்ளமைந்த 'அறிகை அலகுகள்' (COGNITIVE UNITS) அறிவைத் திரட்டவும், பாதுகாக்கவும், பரப்பவும் வல்ல நுண்ணிய சாதனங்களாகின்றன. அதேவேளை அவற்றில் அமைந்துள்ள மனவெழுச்சி அலகுகள், ஆழ்மனம் அல்லது நனவிலி மனத்துடனான தொடர்பாடலுக்குரிய நுழைவாயிலை அமைத்து விடுகின்றன. இவை இரண்டும் இணையும் பொழுது, கட்டுரை **'நிலை மாற்றத்தை'** உருவாக்கும் வடிவமாக மேலெழுகின்றது.

தமிழிற் கட்டுரை வடிவம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் அறிமுகப்படுத்தப்படுகின்றது. அறிவுக் கையளிப்புக் கருவியாகவும் கருத்தேற்றம் (INDOCTRINATION) செய்யும் கருவியாகவும் அவர் கட்டுரை இலக்கியத்தை வினையாற்றல் பெற அறிமுகம் செய்தார். தமிழ் மரபிற் கட்டுரை வடிவத்தின் 'வலுவேற்றலில்' சுவாமி விபு லானந்தரின் பங்களிப்பு முக்கியமானது. தமிழ் மொழியை அறிவியல் மொழியாக்கும் பரிமாணங்கள் அவரது கட்டுரைகளிலே மேலெழுந்து நின்றன. தமிழ்மொழி பல் கலைக்கழக நிலையிலே கற்பித்தல் மொழியாகியமை கட்டுரை இலக்கிய வளர்ச்சியிலே பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தியது.

பின் நவீனத்துவச் சிந்தனைகளை அடியொற்றி மேலையுலகில் வளம் பெறத் தொடங்கிய சொற்களஞ்சியம் தமிழியலிலும் வரவுகொள்ளத் தொடங்க, தமிழ்க் கட்டுரை வடிவமும் உள்ளடக்கமும் அண்மைக் காலமாக மேலும் வளமும் பல்லினப் பாங்கும் பெறலாயின.

'முற்போக்கு' (PROGRESSIVE) என்ற எண்ணக்கரு பிரித்தானியாவின் அறிகை மரபில் மேலெழுந்து. பழமை பேணும் பிரித்தானியச் சிந்தனை மரபுகளுக்கு மாறுபாடாகவும் முரணுரையாகவும் ஆய்வறிவாளர் மத்தியில் இந்த எண்ணக்கரு வளர்த்தெடுக்கப்பட்டது. ஆனால் இலங்கையிலும் இந்தியாவிலும் இந்த எண்ணக்கரு சிறப்பான பொருள் தாங்கி நிற்கின்றது. ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் மார்க்சிய சிந்தனை மரபுகளைத் தழுவுதல் ஆகிய வழித்தடங்கள் வழியான கருத்து வினைப்பாடுகளுடன் (DISCOVRSES) இது தொடர்பும் இயக்க மும் கொண்டிருந்தது.

எந்த இலக்கிய வடிவமும் நூலாசிரியரின் 'கருத்தியலை' மீறி வெளிவருவதில்லை. ஆனால் இந்த மீறும் வீச்சுக்கும் கலைத்துவத்துக்கும் நேர் இணைப்புக் குணகம் உண்டு. நூலியகத்தின் மீள் வாசிப்பில் இந்த வீச்சு சுருக்கியும் விரித்தும் நோக்கப்படுவத்குரிய வாய்ப்புகள் உண்டு. மரபுவழி இலக்கியங்களில் நுண்பாக (MICRO UNITS) அலகுகளாக இருந்த கருத்தியல் வடிவம், முற்போக்கு இலக்கியங்களில் கோவையாகத் திரண்டு நிற்கின்றது. ●



இந்தியாவிலுள்ள காஞ்சிபுரம் கையி லாசநாதர் கோயில் ஆறாம் நூற்றண்டில் கட்டப்பட்ட பல்லவ மன்னனின் அரிய படைப்பு. உருவங்கள் தற்போது சிதைந்து கொண்டிருக்கின்றது என்பதை ஆறு திருமுருகன் அவர்கள் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற திருக்கோயில்கள் வளர்த்த தெய்வ தமிழ் மாநாட்டுக்கு சென்றவேளை கண்ட காட்சியைப் படம் பிடித்து அனுப்பியுள்ளார்.

கட்டுரை

# நெஞ்சோடு போராடுவோம்



ஆக்கம்
**பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்**
**கனடா.**

நூல்களுள் பயன்மிக்க அறிவை ஊட்டும் நூல்களும் உள்ளன. பயன்மிக்க உணர்வுகளை வலுப்படுத்திவிடும் நூல்களும் உள்ளன. இவை இரண்டையுமே ஒருங்கே செய்யும் நூல்களும் உள்ளன. எந்த அளவிலோ மனிதன் மகிழ்ச்சியாக வாழ உதவும் இறுதி இலக்கைக் கொண்டவை நூல்கள். இவ்வுலக வாழ்வை மட்டுமன்றி மறு உலக வாழ்வையும் இன்பமானதாக மகிழ்ச்சிமயமானதாகத் தேடிக் கொள்ள வழிகாட்டுவன நீதி நூல்கள். நன்மைப் பேற்றுக்கு நேரடியாக வழிகூறும் முனைப்புள்ள இவ்வகை நீதிநூல்கள் தமிழிலும் நிறைய எழுந்துள்ளன. நிலையான நீதிகளையும் மாறிவரும் சமுதாய வாழ்வுமுறைகளுக்கேற்பக் காலங்களுக்குப் பொருந்தக்கூடிய - காலங்கள் கட்டாயமாக வேண்டி நிற்கிற நீதிகளையும், தமிழிலும் புலவர்கள் பாடிவருகிறார்கள். அவற்றை மதித்துக் கற்றறிந்து அவை கூறும் நெறிகளில் வாழத் தலைப்படுபவர்கள் இம்மை, மறுமை இன்பங்களுக்கு வழி சமைத்துக் கொள்கிறார்கள்.

ஒரு மனிதன் பூமியில் பிறந்து நூறு ஆண்டுகள் உயிருடன் நடமாடினாலும், அந்த நூறு வருடமும் அவன் வாழ்ந்தான் என்று கொள்ளமுடியாது. அந்த நூறு ஆண்டுகளில் துண்டு துண்டாகவோ தொடர்ச்சியாகவோ எத்தனை நிமிடங்கள் மகிழ்ச்சியாக இருந்தானோ அத்தனை நிமிடங்கள்தான் அவன் வாழ்ந்தான் என்பதே உண்மை. ஆம்! அவன் கவலைப்பட்டுக் கொண்டிருந்த, பயந்து கொண்டிருந்த, ஆவேசப்பட்டுக் கொண்டிருந்த, ஏங்கிக் கொண்டிருந்த, மனம் சலித்து விரக்தியுற்றிருந்த நேரங்களிலெல்லாம் அவன் வாழவில்லை. மரணித்துக் கொண்டே கிடந்தான் என்பதே உண்மை.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்ற மகத்தான உண்மையை - நாம் அடையும் நன்மைகளும், இன்பங்களும், நாம் அடையும் தீமைகளும், துன்பங்களும், நம் எண்ணங்கள், பேச்சுக்கள், செயல்கள் மூலம் நாம் தேடிக் கொள்பவையே என்ற உண்மையை - இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழன் உணர்ந்திருந்தான். இதனைக் கணியன் பூங்குன்றனார் என்னும் சங்க காலத் தமிழ்ப் புலவர் பாடிவைத்த "யாதும் ஊரே யாவருங் கேளீர்" என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடல் வரியான "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்பதன் மூலம் நாம் அறியலாம்.

நம் வாழ்வைத் துன்பம், கவலை, சினம், பயம், தீண்டாத நிம்மதியான, உண்மை வாழ்வாக உயர்த்திக் கொண்டு இன்புற்று வாழ வைக்கக்கூடிய நல்லறங்களை எமக்கு அறிவிக்கும் நீதிப் பாடல்களைத் தமிழில் பாடித் தந்த சான்றோரான புலவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் திருவள்ளுவரும் ஔவை மூதாட்டியும் நாலடியார் நூற் பாடல்களைப் பாடிய புலவர்களும் பழமொழிகளாம் அனுபவ, அறிவு, நீதிக் கருவூலங்களை ஆக்கிச் சென்ற அநாமதேயச் சான்றோர்களுமாவார். இவற்றுள் நானூறு பாடல்களைக் கொண்டது 'நாலடியார்' என்னும் பல்வேறு புலவர்களின் ஆக்கங்களை உள்ளடக்கி எழுந்த

நீதி நூல் வாசகனை முன்னிலைப்படுத்தியோ பொதுப்படவோ நீதிக் கருத்தை அறிவுறுத்தும் வழமையான உத்தி முறைகளுக்கு முற்றும் புறம்பாக புதுமையாக நாலடியார் நீதிநூற்புலவர் ஒருவர் தமது நெஞ்சினையே தமக்கு முன்னிறுத்தி, தமது அந்த நெஞ்சோடு தாமே வாதாடும் பாங்கில், அதற்கு மறைமுமாக அறம் புகட்டும் உத்திமுறை கையாண்டிருப்பது சிலிர்ப்பூட்டுவதாக அமைகிறது. அதாவது,

**ஆவாம் நாம் ஆக்கம் நசைஇ, அறன் மறந்து**
**போலாம் நாம் என்னாப் புலை நெஞ்சே - ஓவாது**
**நின்று ஞற்றி வாழ்தி! எனினும் நம் வாழ் நாள்கள்**
**சென்றன! செய்வது உரை!**

முதுமையில் மரணத்தின் விளிம்பை அண்மித்து நிற்கும் ஒருவன், தன் நெஞ்சோடு முரண்படுவதாய் அமைந்த பாடல் இது. உறங்கும் இரவுப் படுக்கையில் கிடந்தபடி, 'இதுவரை காசு பணம் சம்பாதிக்க ஓடி ஓடி உழைத்துவிட்டேன். அதனால் மரணத்தின் பின் நரகத் துன்பத்துக்கு என்னை ஆளாகாமல் காத்து மோட்ச இன்பம் பெற வைக்கும் தவம், தெய்வ வழிபாடுகள் செய்யத் தவறி வந்துவிட்டேன். விடியட்டும், நாளையிலிருந்து முழுக்க முழுக்கத் தவம், வழிபாடுகளில் மட்டுமே ஈடுபடுவேன். பணந் தேட இனி ஓடவேமாட்டேன்' என்று தீர்மானித்த படி உறங்கிவிடுகிறான். ஆனால் மறுநாள் விடிய எழுந்ததும் அவனது மனம் வழமை போல வேலைக்கோடவும், பணஞ் சம்பாதிக்கவுமே துடிக்கிறது. பரபரக்கிறது. அந்த மனத்தின் மேல் அவனுக்குக் கோபம் கோபமாக வருகிறது. அதேவேளை தவமும், வழிபாடும் அறங்களும் மனத்தின் பூரண ஒத்துழைப்பின்றி ஆற்றப்பட முடியாதவை என்பதையும் உணர்கிறான்.

எனவே "செல்வந்தன் ஆகிவிடுவோம்! செல்வந்தன் ஆகிவிடுவோம்" என்று பொருளீட்டுதலிலேயே முனைப்பாக நின்ற படி வேலைக்கோடவே துடிக்கின்ற என் நெஞ்சே! ஓயாமல் ஓடி ஓடிச் சம்பாதித்துக் கொண்டிரு! சரி அப்படியே செய், ஆனால் ஒன்று! நான் மரணத்தின் விளிம்பில் நிற்கிறேன். மரணத்தின் முன்பாக இந்தச் சில வினாடிகளாவது நான் உண்மையில் செய்யவேண்டியது என்ன? இன்னும் இன்னும் நரகம் தடுக்காப் பொருள் தேடித் தீங்குறுவதா? அல்லது ஓடி ஓடித் தவம், வழிபாடு செய்து இறப்பின் பின்பு நல்லகதி அடைவதா என்பதை நீயே இறுதியும் உறுதியுமாகச் சொல்லிவிடு! என்று தன் நெஞ்சையே பணிந்து கெஞ்சுகின்றான். என்னைத் தவம் செய்ய இனியாவது விடு என்று வேண்டாமல் வேண்டுகிறான்.

வாசகரின் நெஞ்சத்தை வெற்றிகரமாக ஆழமாக உலுக்கி அறநெறியில் முனைப்புக் கொள்ளத் தூண்டும் அனுபவ உத்தி முறையில், நாடகப் பாங்கில், அமைந்த அந்நீதிப்பா இன்றைய காலத் தமிழ்க் குடியானவர்களுக்கு மிக்க நன்மை பயப்பதொன்றாகும்.

அதிகரித்து விட்ட புறத்தேவைகளை நிறைவேற்றுவதற்காகக் கடினமாக ஓய்வொழிச்சலின்றி உழைத்துச் சலிக்கும் இன்றைய சராசரி மனிதர்கள், சற்று நேரமாவது உடலுக்கும் மனதுக்கும் ஓய்வு கொடுத்துச் செபம், தியானம், வழிபாடுகளில் ஈடுபடுவதன் மூலம் கடின உழைப்பில் அன்றாடம் முற்றாகத் தாம் இழுக்க நேரும் மன உற்சாகத்தையும், உடற்சக்தியையும் தினமும் மீட்டெடுத்து ஆரோக்கிய ஆனந்த நிலை பெற இந்நீதிப் பாடல் நிச்சயம் வழிகாட்டும். அதன் மூலம் மன அழுத்தங் காரணமாக நம்மிடையே அதிகரித்து வரும் தற்கொலை மரணங்கள் குறைவடைய வழி பிறப்பது நிச்சயம்.

**(நாலடியார் பாடலை மையமாகக் கொண்ட கட்டுரை)**

கட்டுரை

# பாரதியின் பெண்ணியக் கருத்தும் இன்றைய மௌனித்த நிலையும்

தம்பு சிவா



அன்று தொட்டுப் பெண்கள் அலங்காரப் பதுமைகளாக, நம்பொறிகளுக்கு இன்பம் தரும் விந்தைமிகு இயந்திரங்களாக, ஆண்களுக்கு அடிபணிந்து அவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் தாதியர்களாக, குடும்பத்தைக் கட்டிக் காக்கும் குலவிளக்காக மட்டுமே கண்டு எழுதிவந்த கவிஞர்களின் மத்தியில் பாட்டுக்கொரு புலவனாய், சீர்திருத்தச் செம்மலாய், மறுமலர்ச்சிக் கவியாய், தோன்றிய பாரதி **பெண்ணைப் பெண்ணாகவே** பார்க்கத் தலைப்பட்டார்.

"மங்கையராப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா" என்று கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்களுடைய பாட்டின் வரிகளைக் கேட்கும் பிறநாட்டினர் தமிழர் வாழ்வியலில் பெண்களுக்கு இத்துணை மதிப்பும் செல்வாக்கும் கொடுத்திருக்கிறார்களே! என வியப்படையாமல் இருக்கமாட்டார்கள். ஆனால் உண்மையில் அந்தக் காலத்திலிருந்து இன்றுவரை பலவீனமான ஜீவிகளாகவே கருதப்பட்டு "கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன்" என்று சொல்லிப் பெண்களை அடிமைக் கயிற்றால் சுற்றி இறுக்கமாகக் கட்டிப் போட்டு வாயையும் அடைத்து வைத்திருக்கிறார்கள். இன்றைய கால கட்டத்தில் பெண்களைப் போதைப் பொருளாக எண்ணி அவர்களைப் பலாத்காரம் மூலம் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி சுகம் காணும் கேடுகெட்ட நிலையைக் காணும்போது...

"நெஞ்சு பொறுக்குதில்லையே -
இந்த
நிலைகெட்ட மனிதரை
நினைந்துவிட்டால்"

என்ற பாரதியாரின் உணர்ச்சிக் கொந்தளிப்பை நாமும் உணர்ந்தவராகின்றோம்.

இந்தியத் திருநாட்டில் பெண்களின் வாழ்வியல் கூறுகளை ஊன்றிக் கவனித்த பாரதி, அவர்களின் நிலை குறித்து வருந்தியதோடு அவர்கள் எழுச்சியும் ஏற்றமும் பெற அவர்கள் வாழ்வு ஒளிபெற பல்வேறு கருத்துக்களை முன்வைத்தார். அவர் தம் கருத்துக்களெல்லாம் கவிகளாகவும் கட்டுரைகளாகவும் எழுதப்பட்டன.

நாட்டின் விடுதலை முழுமைபெற வேண்டுமானால் அதற்கு முன் பெண் விடுதலை அளிக்கப்படவேண்டும் என்று எண்ணியே செயற்பட்டார். அவரது பெண்ணடிமைக்கு எதிரான குரல் ஓங்கி ஒலித்தபோதும், ஆணாதிக்கத்தின் செல்வாக்கு பெண்ணடிமைத்தனத்திற்கு ஆதரவாகவே செயற்பட்டுக்கொண்டிருந்தது என்பதை இன்றைய கால கட்டத்திலும் தெரிந்துகொள்ளவைத்துள்ளது.

பாரதியார் காலத்தில் வாழ்ந்த பாவேந்தர் பாரதிதாசனும்

"பெண்ணடிமைத் திருமட்டும் பேசும்
திருநாட்டு
மண்ணடிமைத் தீர்ந்து வருதல் முயற்
கொம்பே!"

என்று பெண்ணடிமை ஒழிக்கப்படாமல்

நாட்டின் அடிமைத் தனம் மாறாது என்று கூறியுள்ளார்.

இலக்கியத்திலும் எழுத்திலும் ஆண் வர்க்கம் மஞ்சள் நீராட்டிப் பெண்வர்க் கத்தை மயக்கியே வந்துள்ளது. அன்று முதல் இன்று வரை ஒடுக்கப்பட்டுக் குன் றிப்போன மாதர் குலம் மயக்கத்தில் தூங்கு கிறதைப் பார்க்க பாரதியும் அதன்பின் தோன்றிய கவிஞர்களும் கொதித்தெழுந் தனர். கண்டது என்ன? நாளுக்கு நாள் பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகள், பாலியல் வல்லுறவுகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. சட்டத்தாலும் தடுத்துநிறுத்த முடியாத வகையில் அட்ட காசமாக மேல் கிளம்பி வருகின்றன.

உலகம்பூராகவும் வாழ்ந்த ஆண் இனம் பெண்களை ஒரு களியாட்டப் பொருளாக, நுகர் பொருளாகக் கருதித் தன் காலத்தை இன்பமாகக் கழித்துள்ளது. பல நாடுகளில் பெண்கள் பிறந்தாலே பாவம் என்று எண்ணினர். இந்தியாவில் சில பின்தங்கிய மாவட்டங்களில் பெண் பிள்ளைகள் பிறந்தால் கள்ளிப்பால் கொடுத்துக் கொல் லும் வழக்கம் இருந்து வருகிறது.

என்ன உலகமடா? ஏன் இந்தக் கோல மடா? ஆணும் பெண்ணும் நிகரெனக் கரு தும் நிலை மாறிப் பெண்டிர் அடிமைப் படுத்தப்பட்டு அல்லலுறுவதைக் கண்ட பாரதி வெதும்பினார், வேதனைப்பட்டார், கொடுமைகளைக் கண்டு பொங்கி எழுந்தார்.

ஆண்களை விட அனைத்து நிலையி லும் திறனுடைய , அறிவுடைய, ஆற்றல் மிகுந்த பெண்கள் ஏன் ஆண்களுக்கு அடங்கி அடிமைகளாய் வாழவேண்டும் என்ற வினாவை எழுப்புகிறார். பெண்கள் விடுதலை பெற மகளிரெல்லாம் இணைந்து சபதமேற்கவேண்டும் . ஆணுக்குப் பெண் அடிமை என்ற பண்டைய வழக்கம் ஒழிய வெண்டும் என்று பின்வரும் பாடலின் வாயி லாகக் கூறுகிறார்.

"விடுதலைக்கு மளிரெல் லோரும்
வேட்கை கொண்டனம் வெல்லும்
என்றே
திடம னத்தின் மதுக்கிண்ண மீது
சேர்ந்து நாம்பிற திக்கினை செய்வோம்!
உடையவர் சக்தி ஆண்பெண் இரண்டும்
ஒருநி கர்செய் தூரிமை சமைத்தாள்!
இடையிலே பட்ட கீழ்நிலை கண்டீர்
இதற்கு நாமொருப் பட்டிருப்போமோ?"

உலக அளவில் நாகரீகத்துக்கு எடுத் துக்காட்டாய் விளங்கிய உன்னதப் பெண்மை நாளடைவில் தன்னுரிமை இழந்து, பெற்றோர், கணவர், மக்கள் என்ற நிலையில் முடங்கி, ஆணுக்கு அடிமை யாகிப் பிள்ளைகளைப் பெற்றெடுத்துத் தரும் இயந்திரமாய்த் தன்னுணர்வின்றித் தாழ்ந்த நிலையை எய்திவிட்டது. இந் நிலையைக் கண்டு பாரதி வருந்தினார்.

"உலகம் முழுமைக்கும் நான் சொல் கிறேன். ஆண் பெண்ணுக்கு நடத்தும் அநியாயம் சொல்லுக்கடங்காது. அதை ஏட்டில் எழுதியவர் இல்லை. அதை மன் றிலே பேசியவர் யாருமில்லை" தமது மிள காய்ப் பழச்சாமியார்' என்ற கட்டுரையில் சாமியார் சொல்லுவதாக மேலே கூறப்பட்ட கருத்தை பாரதியார் முன்வைத்துள்ளார்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் கட் டத்தில் கூடப் பெரும்பாலான நாடுகளில் கொள்கையளவில் மாற்றம் காணப்பட்டா லும் நடைமுறையில் பெரிய மாற்றத்தைக் காண முடியவில்லை. இருபத்தோராம் நூற் றாண்டின் ஆரம்பத்திலிருந்தே மிகமோச மான, பாரதூரமான, வெட்கப்படக்கூடிய, நெஞ்சை நெருடும், அலங்கோலமான பல நிகழ்வுகள் நாளுக்கு நாள் அரங்கேறி வருகின்றன. இவற்றைத் தடுத்து நிறுத்தத் திராணியற்று நிற்கும் கேடுகெட்ட சமு தாயத்தைப் பெண்ணினம் கண்டு நிற்கிறது.

பாரதி பெண்ணடிமைத் தளையை அறுத்தெறிய, 'புதுமைப் பெண்', 'பெண் வாழ்க', 'பெண்கள் விடுதலைக் கும்மி', 'பெண் விடுதலை' போன்ற கவிதைகளின்

வழியாகத் தம் ஆதங்கத்தை வெளிப் படுத்தியிருந்தார். கல்வியின் சிறப்பையும் அவசியத்தையும் கூறிய பாரதி இந்த அரியவாய்ப்பு பெண்களுக்கு மறுக்கப்படு வதைக் கண்டு வருந்துகிறார். பெண் கல்வி மறுப்பவர்களைக் கேலி செய்து, நம்மைச் சிந்திக்க வைக்கிறார்.

"பெண்களுக்கு ஞானத்தை
வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சிலமூடர் - நல்
மாத ரறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்தி
காட்சி கெடுத்திட லாமோ!"

என்று பாரதியார் பெண்களுக்கு இயற் கையிலேயே நல்ல அறிவுண்டு, அதைப் புரிந்துகொள்ளமுடியாத, புரிந்துகொள்ள விரும்பாத தன்னலப் பித்தர்கள் பெண்க ளுக்குக் கல்வியை அளிக்க மறுக்கின்றனர் என்கிறார்.

ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வதை விடுதலையின் இலக்கணமாகக் கண்டார். பெண் விடுதலை யைச் சமூகத் தளத்துக்கும் விரிவுபடுத்தும் வகையிலேயே பெண்களின் உயர் கல்விக் கான வாய்ப்பு வசதிகள் உருவாகும் முன் மணம் முடித்து வைக்கும் முறையை ஒழிப் பதுடன் கணவனைத் தெரிவுசெய்வதில் பெண்ணின் விருப்பத்தைப் பெறல், அவ ளுக்கு உடைமைகளில் சமபங்கு வழங்குதல் என்பவற்றின் அவசியத்தையும் பாரதி வலியுறுத்தினார். மேலும் சிறுபராயத்துத் திருமணங்களை எதிர்த்த பாரதியார், வித வைகள் மறுமணம் செய்துகொள்வதற் காகவுள்ள சமுதாயக் கட்டமைப்பைத் தகர்க்கவேண்டும் என்று வற்புறுத்தினார்.

பெண்ணுக்கு விதிக்கப்பட்டது போன்றே ஆணுக்கும் ஒருதார மணம் நியதியாக் கப்படவேண்டும் என விரும்பிய பாரதியும் பெண்ணிடமிருந்து மட்டுமன்றி, ஆணிட மிருந்தும் கற்பை எதிர்பார்த்தார்.

"ஆணெல்லாம் கற்பை விட்டுத் தவறு
செய்தால்
அப்போது பெண்மையுங்
கற்பழிந்திடாதோ!
நாணமற்ற வார்த்தை யன்றோ?
வீட்டைச் சுட்டால்
நலமான கூரையுந்தான் எரிந்திடாதோ?
பேணுமொரு காதலினை வேண்டி
யன்றோ
பெண்மக்கள் கற்புநிலை பிறழுகிறார்
காணுகின்ற காட்சியெல்லாம் மறைந்து
வைத்துக்
கற்பு கற்பென்றுலகோர்
கதைகின்றாரே?"

-என ஆதங்கப்பட்டு எடுத்துரைத்துள்ளார்.

பாரதியார் போன்று எத்தனையோ மகான் களும் சமுதாயச் சீர்கேடுகளை எடுத்துக் கூறி கொதித்தெழுந்தபோதும் பெண் இனத்திற்கு எதிரான அடக்குமுறைகள் உச்சத்தைத் தொட்டு நிற்கின்ற பரிதாப நிலையைக் காண்கின்றோம்.

பெண்களுக்கு எதிரான பாலியல் வல்லு றவுகள் வயது வித்தியாசமின்றி சர்வ சாதா ரணமாக அரங்கேறிவருகின்றன. அத்து டன் அவர்கள் கொலையும் செய்யப்படு கின்றார்கள். சிலர் அவமானம் தாங்கமுடி யாமல் தற்கொலை செய்து கொள்கின்றார் கள். தந்தை - மகள் என்ற உறவுக்கப்பால், அண்ணன் - தங்கை என்ற உறவுக்கப்பால், ஆசிரியர் - மாணவி என்ற கற்பித்தலுக்கப் பால், அதிபர் - ஆசிரியை - மாணவி என்ற தொடர்புக்கு அப்பால், முதலாளி - அதி காரி என்ற கௌரவத்துக்கு விலை போகும் பணியாளருக்கு அப்பால், இன்னும் எத்த னையோ காமுகர்களின் காமக் களியாட் டங்களுக்கு, பலாத்காரத்திற்கு பெண் ணினம் ஆள்பட்டு வருவைதக் காணும் போது நெஞ்சு பொறுக்குதில்லையே!

போதைப்பொருள்களின் பாவனை மற்றும் சினிமா, தொலைக்காட்சித் தொடர்கள் காட்டும் பாலியல் வல்லுறவுக்

காட்சிகளால் உந்தப்பட்டு பெண்களுக்கு, சிறுமியர்களுக்கு எதிரான வன்முறைகள் மேலோங்கி வளர்ந்து வருகின்றன. இதைத் தடுப்பார் இல்லையா?

உலக மயமாக்கல் என்ற போர்வையில் உலக முதலாளித்தவம் தன்னை நிலை நிறுத்துவதற்காக நாடுகளிடையே கலா சாரச் சீரழிவுகளை ஏற்படுத்தி, மக்களி டையே குரோதங்களை, வன்முறைகளை ஏற்படுத்தி, பொருளாதாரச் சுரண்டல்களை பலவழிகளிலும் மேற்கொண்டு வருகின் றது. மார்க்சியம் மீண்டும் தலைதூக்கும் கால கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக் கின்றது உலகம். பொதுவுடமை ஆட்சி யில்தான் மக்கள் சுபீட்சமாக வாழமுடியும். பெண்களும் உரிமையுடன் வாழமுடியும்.●

---

# கல்வியின் முக்கியத்துவம்

பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு அளிக்கக்கூடிய அதி உயர் சொத்தாகக் கல்வி விளங்குவதோடு முக்கியத்துவமும் பெறுகின்றது. ஒரு குழந்தையின் வாழ்வில் அன்னையே முதலாவது ஆசானாக விளங்குகிறார்.

நமது குழந்தைகளுக்கு எந்தவிதத்திலா வது கல்வியை வழங்கவேண்டும் என்று தம்மாலான அனைத்து முயற்சிகளையும் எடுக்கின்ற பெற்றோர்கள் எம் மத்தியில் அதிகமானோர் இருக்கின்றார்கள். அதே வேளை சில பெற்றோர்கள் தமது குழந்தை களுடன் சிறியளவு நேரத்தைக் கூட பகிர்ந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றார் கள். இன்னுமொரு வகையான பெற்றோர் தாம் கல்வியறிவு அற்றவர்களாக இருந்தா லும் தமது பிள்ளைகள் கல்வி அறிவில் வளரவேண்டும் என்று துடிப்பார்கள். அதற்காக வேண்டித் தம்மை அர்ப்பணிக் கும் பெற்றோர்களும் இருக்கின்றார்கள். இவ்வாறாகப் பலதரப்பட்ட பெற்றோர்கள் எம் சமுதாயத்தில் இருப்பதைக் காணலாம்.

குழந்தைகள் எப்போதும் கற்கவேண் டும், வினாக்களைக் கேட்கவேண்டும் என்று ஆர்வம் காட்டுவார்கள். அவர்களின் இந்த ஆர்வத்தை பெரியோர்கள் எந்த வகையி லும் மழுங்கடிக்கக் கூடாது. இன்றைய குழந்தைகளே நாளைய தலைவர்கள் என் பதனை அனைவரும் மனதில் நிறுத்த வேண் டியது காலத்தின் கட்டாயமாகும்.

கல்வி என்பதன் ஆங் கிலப் பதமானது 'வெளிக்கொணர்' என்று கருதப்படுகின்ற லத்தீன் பதத்தை மூலக் கருவாகக் கொண்டுள்ளது. பெரி யோர்களாகிய நாம் சிறு வர்களின் உள்ளத்தின் ஆழத்தில் புதைந்துள்ள



அறிவு மனப்பாங்கு. ஆற்றல்கள் போன்ற விடயங்களை வெளிக்கொணர முயற்சி செய்யவேண்டும். ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகள் ஒரு வைத்தியராக, பொறியியலாளராக, கல்வியில் உயர் அதி காரியாக வரவேண்டும் என்றே கனவு காண் பார்கள். ஆனால் ஒவ்வொரு குழந்தையும் நாட்டின் விழுமியங்கள் நிறைந்த, பண்பு நிறைந்த ஒரு நல்ல பிரஜையாக மிளிர வேண்டும் என்று கனவு காணவேண்டும். அதற்கு ஏற் றால் போல சிறுவயதிலிருந்தே அவர் களை வளர்த் தெடுக்கவேண்டும்.

கல்வியே இன, மத, பேதமின்றி அனை வரையும் ஒன்றிணைக்கின்ற கருவியாக இருக்கின்றது. எமது நாட்டுக்குத் தேவை யானவர்கள் பலசாலிகள் அல்லர். முக்கிய மாக ஒற்றுமை, அன்பு, சகோதரத்துவம் என்பவற்றைக் கட்டியெழுப்பும் நல்ல பண்பு கள் நிறைந்த மக்களே இன்றைய நாட் டுக்குத் தேவையானவர்களாக இருக்கின் றார்கள்.

**மட்டு.மறைமாவட்ட ஆயர்**
**பேரருட்திரு கலாநிதி**
**யோசப் பொன்னையா ஆண்டகை**

சிறுகதை

> 'இணுவில் ஒலி' லண்டன் சிறப்பிதழில் திருமதி நவஜோதி ஜோகரட்னம் அவர்களால் எழுதப்பட்ட 'பூப்பும் பறிப்பும்' என்னும் சிறுகதைக்கான மாற்றுக் கதையை 'பறிப்பும் பழியும்' என்னும் கதைத் தலைப்பில் பேராசிரியர் கோபன் மகாதேவா எழுதியிருந்தார். இவரின் கதைக்கு மாற்றான உண்மைத் தழுவல் கதையைத் தாயக ஒலியில் **இணுவை வசந்தன்** 'பறிப்பும் முறிப்பும்' என்ற தலைப்பில் முன் வைத்துள்ளார். வாசகரின் கருத்துக்களை வரவேற்கின்றோம்.
>
> \- ஆசிரியர்.

# பறிப்பும் முறிப்பும்

அன்று வெள்ளிக்கிழமை. முருகன் கோயில் வாசலில் நின்று கொண்டிருந்தார் ஓவசியர் தர்மலிங்கம்.

கோயிலுக்குள் இருந்து வெளியில் வந்த நான் தர்மலிங்கம் நிற்பதைக் கண்டு அவருக்குக் கிட்டப் போய்...

"தர்மலிங்கம் அண்ணைக்கு என் மேல கோவமே?"

"ஏனடி பிள்ளை பறுவதம் அப்படிக் கேட்கிறாய்"

"இல்ல அண்ண. உங்கட தங்கைச்சி தவமணியின்ர மகள் மலருக்கு என்ர மகனைக் கேட்டு வந்தவ, அப்ப நான் தர்மலிங்கம் அண்ணேன்ர மகன் மச்சான் காரன் இருக்கேக்க, புறத்தியிலே ஏன் சம்பந்தம் வைக்க ஆசைப்படுகிறயள் எண்டு கேட்டனான்".

அப்ப உங்கட தங்கைச்சி சொன்னவ அங்க அது சரிவராது. எங்கட மகனைத் தான், செய்ய வீட்டில எல்லோருக்கும் நல்ல விருப்பம். அதால மறுப்பில்லாமல் சொல்லுங்கோ எண்டு வற்புறுத்திக் கேட்டவ. எங்கட அவரும் சரியெண்டு சொல்லிப் போட்டார். அதால நீங்கள் எங்கள் மேல கோவப்படுவியளோ எண்டுதான் அண்ண கேட்டனான்.

"அதுக்கென்ன பறுவதம் எங்க எங்க அமைப்பிருக்கோ அங்கதானே நடக்கும். அதால எனக்கொரு கோபமுமில்ல. இருந்தாலும் என்னட்டையும் ஒரு குமர் இருக்கு தெண்டதையும் நீங்கள் யோசிக்கவில்லையே எண்ட கவலையும் இல்லாமலில்ல"

"அண்ண உங்கட மகள் யூனிவசிற்றியில படிக்கிறபிள்ளை. என்ர மகன் ஏ.எல். ஓட படிப்பை நிறுத்திப் போட்டு வேலை கிடைச்சு கிராமசேவகராக வேலை பார்க்கிறான். அவனுக்கு உங்கட படிச்ச பிள்ளைய என்னெண்டு கேட்கிறது? அதோட நாங்கள் புறத்தியாட்கள். நீங்கள் சம்மதிப்பியளோ எண்ட பயத்தில அதைப் பற்றி யோசிச்சே பாக்கேல்ல"

"இப்ப என்ன அந்தச் சம்மந்தம் பேச்சுக் காலோடதானே நிக்குது. பறுவதம், முருகன் கோயில் வாசலில் நிண்டு கதைக்கிறன். என்ர மகளுக்கு பத்துப் பரப்பு காணிக்குள் இருக்கிற நாச்சாரம் வீடும், சரசோலைப் பக்கம் இருக்கிற இருபது பரப்புத் தோட்டக் காணியும், காசு பத்து இலட்சமும், போதுமான நகையும் தரத் தயாராக இருக்கிறன். இப்ப சொல்லு. வாற நல்ல நாளுக்கு எழுத்தை வைப்பம். மகளின்ர படிப்பு முடிய வாற வருஷம் கல்யாணத்த வைப்பம். உன்னட்டையும் ஒரு குமர் இருக்கு. அதுக்கும் ஒரு நல்ல இடமாகப் பாக்க வேண்டும். இந்தத் தர்மலிங்கத்தை

நம்பினால் அவன் கைவிடமாட்டான். வீட்டுக்காரருடன் நல்லா யோசிச்சுப் போட்டு நல்ல முடிவாய் வந்து சொல்லு. நான் வாறன்"

ஓவசியராக இருந்து உழைச்சு சொத்துச் சுகங்களுடன் ஊரில கௌரவமான பெரிய மனுசனாக வாழ்ந்து கொண்டிருக்கும் தர்மலிங்கம் ஏகபத்தினி விரதகாரர் என்று ஊரில சொல்லுவார்கள். ஒரு மகனும் ஒரு மகளும் அவருக்கு. மனிசிக்காறி பிள்ளையள் சின்னனாக இருக்கும் போதே கண்ணை மூடிவிட்டார். பிள்ளைகள் சின்னதுகள்; அதை வளர்க்கிறத்துக்காவது ஒரு கல்யாணத்த செய்யுங்கோ எண்டு பலர் கேட்டும் அவர் ஏலாது எண்டிட்டார். இரண்டு பெண்களை வீட்டு வேலைக்கு அமர்த்திப் பிள்ளைகளைப் பார்க்கும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தார். இருபது வயதில வீட்டு வேலைக்கு வந்த அப்பெண்கள் இருபது வருடத்திற்கு மேலாக அவர் வீட்டில்தான் இருக்குதுகள். அவரும் அவையளை நல்லாய் வைச்சுப் பார்க்கிறார் எண்டு ஊரிலை சொல்லுகினம்.

தர்மலிங்கத்தாரோடு கதைச்சுப் போட்டு வரேக்க என்ர மனம் ஒரு நிலையிலில்ல. எனக்கு என்ன செய்கிறதெண்டு தெரியேல்ல. தர்மலிங்கத்தாற்ர தங்கைச்சியின் மகளுக்கு என்ர மகனைத் தாறம் எண்டு நானும் இவரும் வாக்குக் கொடுத்திட்டம். இப்ப போய் என்னண்டு அவைக்குச் சொல்லுறது. தர்மலிங்கத்தார் தன்ர மகளுக்கு கட்டிக் கொடுக்கச் சொல்லுகிறார். மத்தளத்துக்கு இரண்டு பக்கமும் இடி எண்ட மாதிரி என்நிலை இருக்கு எண்டு யோசித்தபடி நான் வீட்டுக்குப் போகிறன்.

வீட்டில எல்லோரும் சோகமாக இருக்கினம். எனக்கு நெஞ்சு பதறத் தொடங்கி விட்டுது. என்னெண்டு கேட்டன். எல்லோரும் மௌனமாக இருக்கினமே தவிர எனக்கொண்டும் சொல்லலேல்ல.

"என்ன பேசாமல் இருக்கிறியள் சொல்லுங்கோவன்"

"எடி பறுவதம் உன்ர மகனுக்குப் பேசி வந்த சம்பந்தகாரர் கந்தையாவின்ர மகள் வீட்டில மயங்கி விழுந்துவிட்டாளாம். ஆஸ்பத்திரிக்கு மருந்தெடுக்கக் கொண்டு போயிருக்கினம் டாக்குத்தர் சோதித்துப் பார்த்துவிட்டு கெற்பம் தரிச்சிருக்கு எண்டு சொன்னவராம். வீட்ட வந்து பெட்டேட்ட யார் எண்டு கேட்டவையாம். அவள் ஒண்டும் சொல்லாமல் வெறிச்சுப் போய் இருக்கிறாளாம்" எண்டு என்ர மாமிக்காறி சொன்னா.

"அப்பாவிப் பெட்ட யார் எண்டு சொன்னாலும் அவனைத் தேடிப் பிடிச்சு கட்டி வைக்கலாமல்லே". கந்தையற்ற பெட்டைக்கு யாரோட தொடர்பிருக்கும் என்று சிந்திக்கலானேன். ஏன் அவதிப்படுவான். மலிஞ்சால் சந்தைக்கு வருந்தானே என்று எண்ணியவாறு வீட்டு வேலைகளில் ஈடுபடலானேன்.

என்ர மகள் தகப்பனிட்ட என்னவோ சொல்லும் சத்தம் எனக்குக் கேட்டது ஆனால் விளங்கவில்ல.

"என்னவாமப்பா மகள் சொல்லுகிறாள்?"

"முழுகப் போறாளாம். சின்னத்தம்பி கடையில போய் ஒரு சம்போ பைக்கற் வாங்கி வரட்டாமாம்"

"அதுக்கென்ன சும்மாயிருந்து யோசிச்சுக் கொண்டிருக்காமல் வாங்கிக்கொண்டு வந்து குடுங்களன்"

கந்தையர் புதினத்தை மகனுக்குச் சொல்வதற்காக சம்போ வாங்கப் போவதாகச் சொல்லிப் போட்டுப் போய்விட்டார்.

நீண்ட நேரமாகப் போனவரைக் காணவில்லை. 'உதில இருக்கிற கடைக்குப் போட்டுவர இவ்வளவு நேரமோ' வேறு எங்கையும் போய்விட்டாரோ, இந்த மனுசன் ஒருடத்த இருக்காது, வரவிட்டிக் கேட்பம்.

என்று வாய் முணுமுணுத்துக் கொண்டிருக்க வேலையில் கவனத்தைச் செலுத்துகிறன்.

சற்று நேரத்துக்குப் பின் மகனும் தகப்பனும் மோட்டார் சயிக்கிளில் வந்து இறங்குகினம்.

"இஞ்சருங்கோ அப்பா மகள் சம்போவுக்குப் பார்த்துக் கொண்டு நிக்கிறாள். எங்க இவ்வளவு நேரமும் போவிட்டு வாறியள்?"

"சரியப்பா ஏன் கத்திறாய், இந்தா இதைக் கொண்டு போய் கொடு" என்று சொல்லி சம்போ பக்கற்றை என்னிடம் தந்தார்.

"அம்மா பசிக்கிது சாப்பிடுவமே?"

"கொஞ்சம் பொறு ராசா. என்னும் சமையல் முடியேல்ல. கோயிலுக்குப் போய் விட்டு வரச் சுணங்கிப் போச்சு. அதோட தர்மலிங்கத்தாரும் மறிச்சுப் கதைச்சுக் கொண்டு நிண்டிட்டார்."

"அப்பர்தான் சாப்பிடவா எண்டு சொல்லி வந்து கூட்டிக் கொண்டு வந்தவர்"

"தம்பி உனக்கொரு சங்கதி தெரியுமோ? கந்தையற்ர பெட்டை யாரோடையோ தொடர்புகொண்டு கெற்பமாக இருக்கிறாளாம். அவளைத்தான் உன்ர தலையில கட்டி வைக்க நாங்களும் யோசிச்சனாங்கள். கடவுள்தான் உன்னைக் காப்பாற்றி, என்னுமொரு அதிஸ்டத்தையுமல்லே தந்துள்ளார். இண்டைக்கு தர்மலிங்கத்தார் கோவிலடியில வைச்சு தன்ர மகளை உனக்குக் கேட்டவர். கொளுத்த சீதனம் தருவதாகவும் சொல்லியிருக்கின்றார். தங்கச்சிக்கும் நல்ல இடமாகப் பார்த்து செய்து வைப்பது தன்ர பொறுப்பெண்டும் சொல்லியிருக்கிறார். தங்கமான மனுசன். சொந்தக்காரரை விட்டுவிட்டு உன்னை எடுக்க விரும்புகிறார்."

"அம்மா கந்தையற்ற மகளின்ர பிரச்சினையை முதலில் பார்த்துக்கொண்டு.... அதாவது தர்மலிங்கத்தாரின் மருமகனல்லே! இந்த நேரம் எங்கட கல்யாணக் கதையை எடுப்பது சரியில்லை. தர்மலிங்கத்தாரின் மகளும் யூனிவசிற்றியில யாரை காதலிக்கிறாளோ தெரியாது. ஆறுதலாக விசாரிச்சு நல்ல முடிவுக்கு வருவம். முதலில் என்ர தங்கச்சியைக் கரைசேர்த்து விட்டு தான் நான் கல்யாணம் கட்டுவன். அதுவரை பொறுத்திருங்கோ"

"கந்தையற்ற மகளின்ர பிரச்சினையைப் பற்றி விதானை வேலை பார்க்கிற உனக்கு தெரியாமல் போகாதே?"

"அம்மா உந்த விடயம் போனமாதமே எனக்குத் தெரியும் நீங்கள் கல்யாணக் கதை கதைக்கேக்க ஒண்டும் தெரியாத மாதிரி இருந்துவிட்டன். கந்தையாவின்ர மகள் மலர் என்ர கந்தோருக்கு வந்து... "சீலனும் நானும் ஒருவரை ஒருவர் விரும்பியிருந்தோம். அதனால நெருக்கமாகப் பழகிவிட்டம். சொந்தமச்சான்தானே கைவிடமாட்டான் என்ற நம்பிக்கையில் என்னை அவரிடம் இழந்துவிட்டேன். இப்ப நான் கெற்பமாய் இருப்பதைச் சொல்லி உடனே கல்யாணத்தை வைக்கும்படி கெஞ்சிக்கேட்டன். அவர் மறுத்துவிட்டார். எங்கள் பகுதிக் கிராம சேவகர் என்ற வகையில் உங்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று வந்தனான். மேலும் சீலன் உங்கள் நண்பராக இருப்பதால் நீங்கள் சொன்னால் அவர் கேட்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு" என்று வந்து சொன்ன படியால் தான் எனக்குத் தெரியும்

தர்மலிங்கத்தார் நல்ல மனுசன். உதைப் பக்குவமாய் எடுத்துச் சொன்னால் அவர் தன்ர மகன் சீலனுக்கு கந்தையற்ற மகள் மலரைச் செய்து வைப்பார் எண்டு நினைக்கிறன். அப்ப தம்பி உதுக்கு என்ன முடிவு செய்யப்போறாய். சீலனோட ஒருக்கால் கதைச்சுப்பாரன்"

"அம்மா நான் சீலனோட கதைச்சனான். அவன் சொல்லுகிறான். "மச்சானாணை நான் உந்தச் சேட்டைக்குப்

போகவுமில்லை, அவளோட எந்தத் தொடர்பும் வைச்சிருக்கேல்ல. என்னை நம்பு. அவள் பொய் சொல்கிறாள்' இதில் யார் உண்மை சொல்லீனம் எண்டு எனக் குத் தெரியேல்லை. அவள் என்னிடம் வந்து கதைக்கேக்க சொன்னான் வழக்குப் போட் டால் உனக்குச் சாதகமான பதில் கிடைக் கும் ஏனெண்டால் டி.என்.ஏ. பரி சோதனை யில் பிள்ளையின் தகப்பன் யார் எண்டு தெரியவரும் அப்ப உண்மையானவர் தப்ப முடியாது எண்டு.

"அப்ப யாராக இருக்கும் சீலன்தான் பொய் சொல்லுகிறான்"

"யாராக இருந்தாலும் சட்டத்திற்கு முன் நிறுத்தப்பட்டால் உண்மை தெரிய வரும்தானே. அம்மா நாங்கள் உந்தக் கதையை இத்தோட நிறுத்திக் கொள்ளு வம்"

"சரி ராசா நீ சாப்பிடவா" என்று நான் அழைக்க மகன் வந்து சாப்பிடுகின்றான்.

● ● ●

விவரத்தைக் கேள்விப்பட்ட தர்ம லிங்கம் தங்கச்சியார் வீட்டுக்குச் செல்லு கின்றார். அண்ணனைக் கண்டதும் தங் கச்சி வீறிட்டு அழத்தொடங்கி விட்டார்.

"அண்ண நாங்கள் எல்லாரும் பல முறை கேட்டுப்பார்த்தும் அவள் ஒண்டும் சொல்லுகிறாள் இல்ல. நீங்கள் ஒருக்கால் கேட்டுப்பார்த்துச் சொல்லுங்கோ அண்ண"

"சரி எங்க பிள்ளை இருக்கிறாள்"

"உங்க அறையில படுத்துக்கிடக்கிறாள் பாதகி"

தர்மலிங்கத்தார் மெல்லப் போய் அறைக் கதவைத் திறந்து உள்ளே போகின்றார்.

தர்மலிங்கத்தை வெறுப்புடன் பார்த்த மலர்...

"என்ர வாழ்கையைக் கெடுத்த பாவி இஞ்ச ஏனடா வந்தனி?"

"சத்தம் போடாத மலர். இந்த விடயம் எனக்கும் உனக்கும் மட்டும்தான் தெரியும். ஒருவருக்கும் சொல்லிப்போடாதை. யார் கேட்டாலும் சீலன் எண்டு மட்டும் சொல்லு. எப்படியெண்டாலும் நான் சீலனை உனக் குக் கட்டவைப்பன். இந்த வயதிலும் தர்ம லிங்கம் இப்படிச் செய்து போட்டானே எண்டு உலகம் என்னைத் தூற்றும் . நான் உயிரோடை இருக்கேலாது. தயவு செய்து எச்சந்தர்ப்பத்திலும் எக்காரணம் கொண் டும் யாருக்கும் சொல்லவேண்டாம். சீலன் தான் உன் கணவன். அதில் எதுவித மாற்ற மும் இல்லை."

அறைறை விட்டு வெளியில் வந்த தர்ம லிங்கத்தாரைப் பார்த்து...

"என்னவாம் அண்ண அவள் சொல் கிறாள்"

"நானும் கேட்டுப்பார்த்தன் மலர் ஒண் டும் சொல்லுதில்லை. நீங்களும் அவளை வற்புறுத்திக் கேட்கவேண்டாம். அவள் மனநிலை சரியில்லை. ஏதேதோ சொல்லு கிறாள்" எண்டு சொல்லிய தர்மலிங்கம் தலையைக் குனிந்தபடி தனது வீட்டை நோக்கிச் செல்லுகிறார். வீட்டுப் படலை யைத் திறந்து கொண்டு உள்ளே செல்ல, அவர் வீட்டு நாய்கள் இரண்டும் புதிய ஆளைக் கண்ட மாதிரி அவரைப் பார்த்துக் குரைக்கத் தொடங்கிவிட்டன. தனது கேவலங் கெட்ட செய்கை நாய்களுக்கும் தெரிந்துவிட்டதோ என்ற அங்கலாய்ப்பு டன் நாய்களை வெறித்துப் பார்க்கிறார் தர்மலிங்கம். சூரியனும் இவரைக் பார்க்கப் பிடிக்காமல் மேற்கே சென்று மறைந்து விட்டான். ●



**கலாபூஷணம் விருதுபெற்ற திருகோணமலை ஷெல்லிதாசனை 'தாய ஒலி' வாழ்த்தி மகிழ்கின்றது**

# 'தாயக ஒலி' வெளியீட்டு விழாவில் கௌரவம் பெற்ற



# வவுனியூர் இரா.உதயணன்

உலக இலக்கியப் பரப்பில் தனக்கெனத் தனித்துவமான இடத்தைப்பெற்று முகிழ்ந்து நிற்கும் வவுனியூர் இரா.உதயணன் அவர்கள் 1960ஆம் ஆண்டு ஏப்பிரல் 24 ஆம் திகதி இராமகிருஷ்ணா தம்பதியினரின் மகனாக வவுனியாவில் பிறந்தார்.

பிரிட்டன் ஸ்கொட்லாந்து பல்கலைக் கழகத்தில் கணக்கியல்துறையில் முதுநிலைமாணிப் பட்டமும் மன்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் நிர்வாகவியலில் வணிக மேலாண்மை முதுகலைமாணிப் பட்டமும் பெற்ற உதயணன் அவர்கள், தற்பொழுது இலண்டனில் புகழ்பெற்ற தொலைத் தொடர்பு நிறுவனத்தின் நிதித்துறை இயக்குநராகப் பணியாற்றி வருகின்றார்.

இளவயதிலேயே பிரிட்டனில் தாம் மேற்கொண்ட கல்வியை நிறைவு செய்துகொண்டு, அங்கேயே சிறப்புடன் வாழ்ந்து வருகின்ற போதிலும், தாம் பிறந்த தாயக மண்ணை என்றும் மறந்ததில்லை. இலங்கையில் நிகழ்ந்த விபரீதங்களை உன்னிப்பாகக் கவனித்து, போரினால் அல்லலுற்ற மக்களுக்கு தன்னாலான உதவிகளைச் செய்து வருகின்றார். அத்துடன் தாம் எழுத எடுத்துக் கொண்ட கதைக் கருவுக்கு உரிய மூல காரணிகளைக் கண்டறிந்து தமது படைப்புகளின் வாயிலாக அதற்கான தீர்வுகளையும் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

'மாறுபட்ட சூழலில் வேறுபட்ட மனிதர்கள்' (சிறுகதைத் தொகுதி), 'விதி வரைந்த பாதையிலே' (நாவல்), 'சுருதி பேதமடைகிறது' (நாவல்), 'நூல் அறுந்த பட்டங்கள்' (நாவல்), பனிநிலவு (நாவல்) ஆகிய நூல்களை எழுதி வெளியிட்ட இரா.உதயணனின் 'பனிநிலவு', நூல் அறுந்த பட்டங்கள் ஆகிய நாவல்கள் புதுமை பேசுகின்றன. உள்நாட்டுப் போரின் விளைவாக கிராமங்கள் சிதைந்தன. மக்கள் தமது வீடு வாசல்களையும் சொத்துச் சுகங்களையும் இழந்து உயிரினும் மேலாக நேசித்த மனைவி மக்களைச் சொந்தங்களைப் பறிகொடுத்து சொந்த நாட்டிலேயே அகதிகளாக அல்லலுற நேர்ந்தது. இத்தகைய துன்பப்பட்ட மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை முன்னிறுத்தி, அவற்றைத் தமது கதைகள் வாயிலாக வெளிக்கொணர்ந்து அதற்கான தீர்வுகளையும் முன் வைத்துள்ளார்.

இவ் இரு நாவல்களும் இந்தி மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டு, இந்தியாவில் வெளிவருகின்ற இந்திப் பத்திரிகைகளின் தரமான விமர்சனங்களையும் பெற்றுள்ளன. 'பனிநிலவு' நாவலுக்கு நாமக்கல் கு.சின்னப்பாரதி அறக்கட்டளையின் முதன்மை விருதும், இலங்கை கொடகே நிறுவனத்தின் இலக்கியப் பரிசும் வழங்கப்பட்டுள்ளது. இவரின் 'நூல் அறுந்த பட்டங்கள்' தமிழ்நாடு கலை இலக்கியப் பேரவை விருதினைப் பெற்றுக்கொண்டது. 'விதிவரைந்த பாதையிலே' என்ற உதயணனின் சிறுகதைத் தொகுப்புக்கு இலங்கை சாகித்திய மண்டல விருதும் கிடைத்துள்ளது. இவரது படைப்புகள் சில சிங்கள மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

கல்விக்கும், தமிழ் இலக்கியத்துக்கும், எழுத்தாளர் ஊக்குவிப்புக்கும் பெருமளவில் தமது ஆதரவை வழங்கி வருகின்ற இரா.உதயணன் அவர்கள் 'இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகத்தின் தலைவராய் இருந்து அரும்பணி ஆற்றி வருகின்றார்.

அத்தகைய பெருமைக்குரிய பிரபல எழுத்தாளர் வவுனியூர் இரா.உதயணனை இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் 'தாயக ஒலி' சஞ்சிகையும் பெருமையுடன் கௌரவிக்கின்றது.

கட்டுரை

# பின் - நவீனத்துவத்தின் வீழ்ச்சியும் பின்-பின்-நவீனத்துவத்தின் முன்மொழிவும்



பேராசிரியர்
சபா.ஜெயராசா

நவீன கலைத் திறனாய்வுகளில் கட்டடக் கலைஞர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். கட்டடக் கலைஞராகிய ரொம் ரேர்னர் பின் நவீனத்துவத்தின் சாய்வையும் வீழ்ச்சியையும் விளக்கி ஓர் ஆய்வு நூலை 1995 ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார். அந்த நூலில் முன்வைக்கப்பட்ட புதிய கருத்து முன் மொழிவுக்கு பின் - பின் நவீனத்துவம் என்று பெயரிடுவதா அல்லது புதிய வேறு பெயரை வைப்பதா என்ற வினாவையும் எழுப்பியுள்ளார்.

பின் – பின் நவீனத்துவத்துவம் என்பதற்குப் பதிலாக "மீநவீனத்துவம் (META-MODERNISM) என்ற சொல்லையும் பயன்படுத்தலாம் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது.

நவீன கைத்தொழில் வளர்ச்சியோடும் பரிசோதனைகளோடும், பழைமை இறுக்கங்களின் நிராகரிப்போடும் தோற்றம் பெற்றதுதான் நவீனத்துவம். உடை, உணவு, கலை, இலக்கியம், கட்டடக் கலை, கல்வி, தொடர்பாடல் போன்ற அனைத்துத் துறைகளிலும் அதன் ஊடுருவல் நிகழ்ந்தது.

நவீனத்துவத்தின் ஒருதலைப்பாங்கான போக்கை நிராகரித்துப் பின் நவீனத்துவம் தோற்றம் பெற்றது. அது பல்வேறு மட்டுப்பாடுகளைக் கொண்ட ஒரு கருத்து வடிவம். வரலாற்றின் வளர்ச்சியையும் தொடர்ச்சியையும் அதனுள் ஊடுருவிய அர்த்தத்தையும் பின் - நவீனத்துவம் நிராகரிக்கின்றது. அவ்வாறு நிராகரிப்பதன் வாயிலாக மார்க்சியத்தை புறந்தள்ளி விடுகின்றது.

அனைத்து உலகம் தழுவிய பெருங் கோட்பாடுகளை பின் - நவீனத்துவம் ஏற்றுக்கொள்வதில்லை. அவற்றைப் பெரும் உரையங்களாகவும் பெருங்கதையாடல்களாகவும் பின் நவீனத்துவவாதிகள் கருதுகின்றனர். அவை அதிகாரத்தின் வடிவங்கள் என்பது அவர்களின் கருத்து. அவ்வகையில் உலகில் உருவாக்கம் பெற்ற அனைத்துப் பெருங்கோட்பாடுகளையும் அவர்கள் நிராகரிப்புக்கு உள்ளாக்குகின்றனர்.

பெரும் இலக்கியங்களை அவ்வக் காலங்களில் உருவாக்கம் பெற்ற அதிகாரத்தின் வடிவமாகவும் நீட்சியாகவும் முக்கியப்படுத்தும் அவர்கள் அதனோடு தொடர்புடைய வர்க்க இருப்பைக் கண்டு கொள்ளவில்லை. வர்க்கம் என்ற நிலையிலே 'திரட்டி'ப் பார்த்தலும் அவர்களின் பார்வையில் நிராகரிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றது.

அதிகாரத்தினால் உருவாக்கம் பெறும் 'மையம்', 'விளிம்பு' என்ற கருத்து வடிவங்களை முன்வைக்கின்றனர். விளிம்பு நிலைக் கருத்துக்கள் பொருத்தமற்றவையென்றும், ஒவ்வாதவை என்றும் மையம் தள்ளுபடி செய்த வண்ணமிருக்கும்.

முதலாளி - தொழிலாளி, இயற்கை - சேர்க்கை, அகவயம் - புறவயம் என்ற இருமை நிலைகளை அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. முதலாளியம், சுரண்

டல் முதலியவற்றின் நடப்பியல் அழுத் தங்களை நோக்காது வெறும் மொழி விளையாட்டாகக் கருதுகின்றனர். மொழி யின் வழி எழும் நூலியங்களின் தகர்ப்பு அவர்களால் விதந்து பேசப்படும் கருத்தாக்க மாகவுள்ளது. அந்நிலையில் பின் நவீனத் துவம் ஒரு கோட்பாடு அன்று அது ஓர் அல சல் முறைதான்.

மார்க்சியர்கள் பின்நவீனத்துவத்தை இயங்கியல் தருக்க அடிப்படைகளோடு நிராகரிப்புக்கு உள்ளாக்கினர். வளர்ந்து வரும் உலக முதலாளியத்துக்கும் அதன் சுரண்டல் முறைகளுக்கும் முண்டு கொடுக்கும் கருத்தாடலாக அது அமைந் துள்ளமை மார்க்சியத்தினால் தெளிவு படுத்தப்படுகின்றது.

மேற்கூறியவற்றின் பின் புலத்திலே தான் பின் - பின் நவீனத்துவம் என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது. பின் நவீனத்துவ முரணுரைகளுக்கு மறுதலிப் பாக நம்பிக்கை, பற்றுறுதி, உரையாடல், ஆற்றுகை, நேர்மைநிலை முதலிய வற்றை ரேர்னர் முன்வைக்கின்றார். நம்பிக்கையுடன் காரணம் காணலை அவர் முன்னெடுக்கின்றார்.

நகரத் திட்டமிடலில் காலங்கடந்து நிற் கும் விதிகளும், கணித முறைமைகளும் பொருட்களும் காணப்படுகின்றன. பின் நவீனத்துவவாதிகள் அவ்வாறு நிலை பேறு கொண்டவை எவையுமில்லை என்ற கருத்தை எப்பொழுதும் வலியுறுத்தி வரு தல் குறிப்பிடத்தக்கது.

பின் நவீனத்துவத்தின் பண்பாட்டுக் காலம் முடிவடைந்துவிட்டதென்றும் எண் ணிமத் தொழில்நுட்ப ஆட்சி நிரலுக்குரிய செயல் வழி பிறந்துள்ளது என்பதுமான கருத்தை பிரித்தானிய திறனாய்வாளர் அலன் கிர்பி முன்வைத்துள்ளார்.

பின் - பின் நவீனத்துவம் என்பது பின் - நவீனத்துவத்தையும் சமகாலத்து நவீனத் துவத்தையும் உள்ளடக்கி நிற்கின்றது.

புவி அரசியலின் உறுதியின்மை, உலக ளாவிய நிதி நெருக்கடி, புவிக்கோளம் வெப்பமடைதல், உலகின் காலநிலை மாற்றங்கள், பன்னாட்டு நிறுவனங்களின் உலகம் தழுவிய சுரண்டல், சிறுபான்மை இனக் குழுமங்கள் பெரும்பான்மை யினரால் அடக்கி ஒடுக்கப்படுதல், கல்வி உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் ஊடுருவி நிற்கும் அதீத போட்டி நிலவரங் கள் முதலிய நவீனதோற்றப்பாடுகளை விளங்கிக் கொள்வதற்கோ விளக்குவ தற்கோ பின் நவீனத்துவம் போதுமான தாக இல்லை என்ற கருத்து முன் வைக்கப் பட்டுள்ளது.

நகரங்களின் புதிய வளர்ச்சிக் கோலங் களும், புதிய தொழில் முறைகளும், போக்கு வரத்தும் அவற்றுடன் தொடர்புடைய புதிய நகரத் திட்டமிடலும் பின் நவீனத் துவத்தின் கருத்தியல் வீச்சுக்கு அப்பாற் பட்டுச் செல்கின்றன. பிரதேசவாதம், சூழ லியல் வாதம், நிமிர்வளர்ச்சி, பாதசாரிகள் வாதம் முதலிய பண்புகளுடன் நிலை மாறும் அறிபரவலுடன் இணைந்த வளர்ச் சிக்குப் பின் நவீனத்துவத்தை மீறிச் செல் லும் புதிய அணுகு முறைகள் வேண்டப் படுகின்றன.

நவீனத்துவத்தின் மட்டுப்பாடுகளைக் கருத்திற் கொண்டு பின் நவீனத்துவம் தோற்றம் பெற்றது. பின் நவீனத்துவத்தின் மட்டுப்பாடுகளை அடியொற்றி பின் - பின் நவீனத்துவம் முன் வைக்கப்படுகின்றது.

1990 ஆம் ஆண்டைத் தொடர்ந்து பின் - நவீனத்துவத்தின் எழு கோலம் (FASHI-ON) வீழ்ச்சி அடையத் தொடங்கியது. ஏற்கனவே அதன் மட்டுப்பாடுகளையும், தருக்க நிலைப் பலவீனங்களையும் மார்க் சியர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். அதே வேளை பின் - நவீனத்துவத்தின் கவர்ச்சி மேலைபுலகில் வீழ்ச்சியடைந்து வரும் வேளை, தமிழகச் சூழலில் அது இன்ன மும் வரவேற்கப்படுவதாகவே உள்ளது.

பின் - நவீனத்துவத்தை விரிவான மதிப்பீடுகளுக்கு உள்ளாக்கிய ஆய்வாளர் கிர்பி அவர்கள் அதன் இயல்பை "போலி நவீனம்" (PSEVDO MODERNISM) என்ற கணிப்பீடு செய்தார். ஆழமற்ற மேலோட்ட மான அதன் தன்மையை வெளிப்படுத்தினார். அந்தத் தளத்தில் உருவாக்கப்பட்ட கலை இலக்கியங்களும் மேலோட்டங்களின் தழுவல்களாகவே அமைந்திருந்தன.

நவீன வளர்ச்சிக் கோலங்களின் சாராம்சத்தைக் கண்டறிய முடியாத நிலையும், சமூக வளர்ச்சியின் தருக்கத்தைக் கண்டறிய முடியாத கருத்தியல் அவலமும், சமூக நடப்பியலை நிராகரித்து மேலோட்டமான அழகியற் பூச்சுக்குள் நுழைந்தமையும் பின் நவீனத்துவத்தை மீறிச் செல்லும் பின் - பின் நவீனத்துவச் சிந்தனைகளுக்கு வழிகோலியுள்ளன.

பின் - பின் - நவீனத்துவம் என்ற பெயரிடல் பொருத்தமானதா என்ற கேள்வி எழுகின்ற வேளை பெயர் குறித்தல் முக்கியமன்று அது தாங்கி நிற்கும் உள்ளடக்கமே முக்கிய மானது என்பதை மனங் கொள்ள வேண்டியுள்ளது. வலிமையான கருத்தியலை உள்ளடக்கமாகக் கொள்ளாத "பெயரிடல்" வெறும் கவர்ச்சியானதாகவே அமையும். ●

இலக்கியம்

# இலக்கியம் எதைச் சொல்லவேண்டும் என்பதை எவருமே வரையறுக்க முடியாது

**'சமூக இருப்பும் இலக்கியமும்' என்ற தலைப்பில் திருகோணமலை இந்துக் கல்லூரி மண்டபத்தில் உரையாற்றிய பேராசிரியர் சி.சிவசேகரம் அவர்கள் முன்வைத்த கருத்துக்களை 'தாய ஒலி' வாசகர்களுக்கு வழங்குகின்றோம்.**

**- ஆசிரியர்**

இலக்கியம் என்பது அடிப்படையில் ஓர் ஆவணப்படுத்தலாகும். நாம் எதை ஆவணப்படுத்துகிறோம் என்பது அடிப்படையானதாகும். எவ்வாறு ஆவணப்படுத்துகிறோம் என்பது, நாம் சொல்வது யாரை எவ்வளவு வலுவுடன் சென்றடைகின்றது என்பதைத் தீர்மானிக்கின்றது.

இலக்கியம் எதைச் சொல்லவேண்டும் என யாரும் வரையறுக்க இயலாது. எனினும் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு இடத்திலும் உருவான இலக்கியங்கள் அன்றைய சமூகச் சூழலின் பிரதிபலிப்புகளாகவே இருக்கின்றன. அவ்வகையில் அக உணர்வு சார்ந்த படைப்புகளில் மனிதனின் சமூக அறக்கோட்பாடுகளும், சமூக விழுமியங்களும், சமூக நடைமுறைகளும், சமூக நிலைகளும் எவ்வாறோ தம்மைப் புலப்படுத்தி நிற்கின்றன.

தனிமனித இருப்பு என்பது சமூக இருப்பில் நின்றும் பிரிக்க இயலாத ஒரு கூறாகும். இலக்கியத்தை அதன் சமூகச் சூழலிலிருந்து பிரித்து நோக்கும் ஒரு போக்கின் விளைவாகவே இலக்கியத்துக்குத் தன்னளவிலான இருப்பு ஒன்று உள்ளதென்ற எண்ணம் உருவாகியது. அதேவேளை ஒரு படைப்பாளியின் ஆழமான சமூக அக்கறை என்பது எப்போதுமே தன்னைப் பிரகனடப்படுத்திக்கொண்டு வெளிப்படத் தேவையில்லை. அதேவேளை, ஒரு படைப்பாளியின் ஆழமான சமூக அக்கறை ஒரு விரிந்த சமூக நோக்கிலும் உலகளாவிய மானிட நோக்கிலும் அவரது படைப்புகளில் புலப்படும்.

கட்டுரை

# "பழந்தமிழ் கலைகளில் முதன்மை பெற்றது வில்லிசை"



- தம்பு சிவசுப்பிரமணியம்



உலகப் பண்பாட்டின் வரலாறு, பண்ண ழகும் மேன்மையும் பொருந்திய அறுசீர் விருத்தங்களிலே எழுதப்பட்டுள்ளது. பழங் காலத்தில் சாதித்த சாதனைகளை மனிதர் கள் போற்றி வணங்கும் நாள் வரத்தான் போகிறது. சாவை விரட்டி வெற்றிகண்ட வாழ்வின் களமாக நமது பூமி இப்பிரபஞ்சத் தில் திகழும். கலை வாழ்வுக்குரிய சுதந்திர மாக கலை - மேன்மையைச் சிருஷ்டிக்கும் கலை - இந்தப் பூமியிலே நிச்சயமாகப் பூத் துக்குலுங்கும். மக்களிடையே இருக்கின்ற சக்திகளின் முழுச் சேமிப்பையும் எல்லா வழிகளிலும் வளர்த்து ஒன்று திரட்டுவதும், அந்தக் சக்திகளை செயலுள்ள ஒரு சக்தி யாக மாற்றுவதும் வரலாற்றின் இன்றைய கடமையாகும். அந்த வகையில் தொன் மைக் கலைகளில் ஒன்றாக விளங்கும் வில்லுப்பாட்டுக் கலை யையும் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்லவேண்டிய பெரும் பொறுப்பை இன்றைய சமுதாயம் எதிர் கொள்கின்றது.

நாட்டுப்புற இயல் என்பது மிக விரிவான ஒரு பழமரபுத்துறை. வில்லுப்பாட்டு என்பது நாட்டுப் புறக் கலையையும் இலக்கியத் தையும் உள்ளடக்கிய ஓர் அருங் கலை. வில்லுப்பாட்டு தமிழர்தம் தொன்மைக் கலைகளுள் ஒன்றாக விளங்குகின்றது. நாட்டுப்பாடல் வகைகளில் ஒன்றாகக் கருதப் பெறுவது. இயலும், இசையும், நாடகமும் கலந்த முத்தமிழும் வெளிப் படும் கலைகளுள் முதன்மையகத் திகழ் கின்றது. இக்கலை தமிழ்நாட்டில்தான் தனது மூல வேரைக் கொண்டிருந்தது. முற்கூடற் பள்ளு போன்ற பழைய இலங் கியங்களிலும் வில்லடிப் பாட்டு எனக் குறிப்பிடப்படுவது இதன் தொன்மையைக் காட்டும். பாமர மக்கள் பரம்பரையாய்ப் பாடி வருகின்ற பாடலைப் பல்வரிக் கூத்து என்பர் அடியார்க்கு நல்லார். எனவே வில் லுப் பாட்டு பாரம்பரியமாக தொன்றுதொட்டு இருந்துவந்த ஒருகலை என்பது புலனா கின்றது.

வில்லுப்பாட்டு தமிழ்நாட்டின் பழங் கலை மட்டுமன்று, வளஞ்செறிந்த கலை யுமாம். பாடப்பெறும் பாடல்களின் பண் ணினாலும் இசைக்கப்பெறும் எழுச்சிமிகு இசைக் கருவிகளினாலும் மக்களை வயப் படுத்தும் வலிமைசான்று நிற்கும் கலை வில்லிசையாகும். உள்ளத்து உணர்ச்சி




# Immigration Consultancy Services

**Student Visa**

**Asylum**

**Immigration**

**Sponsorship**

**Uk Visa Extension**

**Entry Clearence**

**Work Permit**

**and**

**Any other immigration services**

**Prof. Dr. SIR Navaratnalingam Vivekanantha MD PhD**
**Office of Immigration Service Commission Level 3 (OISC)**
**221 Dunsfoldway New Addington, Croydon CR0 0TR**
**Branch :** 54,High Street Colliers wood, London SW19 2BY
**M: 075 380 78 778 E: navaviveks@live.co.uk**

# அனைத்துலகப் புத்தகப் பரிசுப் போட்டி

## தேசிய நில நிதி கூட்டுறவுச் சங்கம், மலேசியா.

**டான்ஸ்ரீ கே.ஆர். சோமா மொழி இலக்கிய அறவாரியம் வழங்கும்**
**அனைத்துலகப் புத்தகப் பரிசுப்போட்டி - US$ 10,000/=**
**மலேசியப் புத்தகப் பரிசுப்போட்டி - RM 10,000/=**

**போட்டிக்கான விதிமுறைகள்**

அ. துறை - நாவல் வரலாறு மற்றும் ஆய்வு சார்ந்ததாக இருக்கலாம்.

ஆ. மொழி - தமிழ்

இ. மொழித்தரம் - தமிழ்மொழியின் இலக்கணம், சொல்லாட்சி, மரபு ஆகிய கூறுகளில் தரமுடையதாக இருத்தல்.

ஈ. சொந்தப் படைப்பு - கடந்த 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டில் வெளிவந்த/ வர இருக்கும் முதல் பதிப்பு நூலாக இருக்கவேண்டும்.

உ. நூலின் அமைப்பு - பதிப்புத்தரம் - ஏற்புடைய தரமுடையது.

ஊ. படைப்புத்திறன் - அந்தந்தத் துறைக்குரிய கலைக்கூறுகள், மரபு, உத்திகள் ஆகியவற்றுடன் பண்பாட்டு வரம்புகளுக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும்.

எ. படைப்பாளர் 31.03.104 இற்குள் தமது நூலில் 3 படிகள் அனுப்பிவைக்கவேண்டும். பரிசுக்குரியவருக்கு கடித வாயிலாக தெரிவிக்கப்படும்.

அறக்கட்டளையின் அகப் பக்கத்திலும் நாளிதழ்களிலும் பரிசு முடிவு பற்றி அறிவிக்கப்படும். 2014 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் கோலாலம்பூரில் பரிசளிப்பு விழா நடைபெறும்.

**போட்டியின் முடிவு சம்பந்தமாக எந்தவித கடிதத் தொடர்பும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

**குறிப்பு :** மலேசிய படைப்புக்களும் அனைத்துலகப் போட்டிக்கு எடுத்துக்கொள்ளப்படும். மேலும் விவரம் வேண்டுவோர் கீழ்க்கண்ட அறவாரியத்தின் அலுவலகத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். இணையத்தளத்திலும் பார்க்கலாம்.

**போட்டிக்கு அனுப்பவேண்டிய விலாசம்:**

**டான்ஸ்ரீ கே.ஆர். சோமா மொழி - இலக்கிய அறவாரியம்**
தேசிய நில நிதி கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்
National land finance co-operative society limited
LEVEL 10 WISMA TUN SAMBANTHAN NO. 2 JALAN SULTAN SULAIMAN PO BOX 12133 50768
KUALALUMPUR, MALAYSIA
http://tansrisomabookaward.org/

உடல் வளர்ச்சிக்கு

# ஜீவாகாரம்

சிறியோர் முதல் பெரியோர் வரை பாவிக்க


உகந்த சத்துணவு





Manufactured By:

**ANNA INDUSTRY, INUVIL**

T.P: 021 2223565








**Contact Us**

T: 01689 848 829 | M: 075 380 78 778
www.londonacademycollege.co.uk
info@londonacademycollege.co.uk

# London Acadamy College

## University of Croydon

### Offered courses

- Business Studies
- Management Studies
- Legal Studies
- Hospitality Management
- Computing and Information
- Processing
- Edexcel Btec HND in Business
- Edexcel HND in Computing and System Management
- Health and Social Care
- Btec Level 7
- Management and Leadership
- Skills for life and work

### Other courses

Grammer School

Diploma in English

IELTS

Citizenship Classes

Life in the UK

A Level Classes *(All Subjects)*


LWAtraining
skills for life skills for work
Education
Training
Skills
FREE ENGLISH CLASSES
FREE CLASSES OPEN TO ALL
ENROL TODAY!
ESOL CITIZENSHIP
FAST TRACK
CITIZENSHIP TEST
DRIVING THEORY
PASS YOUR DRIVING THEORY
WITH ESOL
AAT & SAGE TRAINING
BOOKKEEPING AND
PAYROLL COURSES
PERSONAL AND PREMISES LICENCE
AWARD FOR PERSONAL
LICENCE HOLDERS (APLH)
FOOD SAFETY LEVEL 2
FOOD SAFETY AND HYGIENE
COURSES
SECURITY
SIA SECURITY COURSES
SECURITY COURSES
IN SIA, CCTV AND MORE
LWAtraining
For details please contact us:
020 3405 1887 | 07703 193949 | 07803 903897
www.lwatraining.co.uk info@lwatraining.co.uk
sage


HENSHOU
ISSHINRYU KARATE
ACADEMY
59 Cranley Road, Ilford, Essex, IG2 6AF
Tel: 020 8518 3288, Mob: 07950346432, Email: info@henshou.com, Web: www.henshou.com
AFFILIATED TO ISSHINRYU WORLD KARATE ASSOCIATION – OKINAWA, JAPAN AND
ALL INDIA ISSHINRYU KARATE ASSOCIATION - INDIA
DEVELOP YOUR
SELF DEFENCE, SELF CONTROL
SELF DISCIPLINE,
COURAGE & LEADERSHIP
*Renshi Raveendran is a 6th Dan Black Belt who has trained directly under Master Shihan Hussaini(India), Grandmaster Christopher Chase (USA) and Grandmasbar Kichiro Shimabuku(Japan)
*Trained and coached over 1000 students from various branches (Students age varies from 5yrs to 65 yrs-male and female).
*His Students have won many awards from various local competitions and world Isshinryu Karate competitions held in the USA
தமிழர்கள் செறிந்து வாழும் பல பகுதிகளில்
றென்ஷி ரவீந்திரனது நேரடிக் கண்காணிப்பில்
தகுதி வாய்ந்த ஆசிரியர் குழுவின் அனுசரணையுடன்
இஷின்றியு கராத்தே வகுப்புக்கள்
சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது
OUR BRANCHES:
EASTHAM, MANOR PARK, NEWBURY PARK
WALTHAMSTOW, PLUMSTEAD, LEWISHAM
CROYDON, MITCHAM, BRISTOL, HARROW
SOUTHEND, SWINDON
CONTACT : RENSHI KANDIAH RAVEENDRAN (6th DAN BLACK BELT)
TEL : 020 8518 3288
MOB : 07950 346 432
Email : info@henshou.com Web : www.henshou.com


Select
Lettings
Mortgages
Maintenance
'Select your next move with US'
Guaranteed Rent throughout London
In - house property maintenance team
பொங்கல் வாழ்த்துக்கள்!
0208 45 470 1500
288 High Street North
London, E12 6SA
www.select.gb.com
OFT
Approved code
Gas safe register
NAPIT
ELECSA
rightmove.co.uk
Zoopla.co.uk
Your advantage in property

களை வெளியிட மனிதனுக்குக் கிடைத்த கலைக் கருவிகளிலே வில்லடியும் ஒன்று.

வில்லடியின் உறுப்புக்கள் பல. அவற்றுள் வில்லும், குடமும். உடுக்கும் முக்கியமானவை. வில்லிலே சதங்கைகள் கட்டப்பட்டிருக்கும். ஒரு மண்குடத்தினுடைய கழுத்துப் புறத்திலே வில் கட்டப்பட்டிருக்கும். மண்குடம் திருகணையில் வைக்கப்படும். கைபிடியுள்ள மட்டை கொண்டு குடத்தின் வாயிலே தட்டும்போது மிருதங்கநாதம் போன்ற தொனி தோன்றும். இதற்கு ஒத்து ஒலிப்பது உடுக்கு. வெண்கலக் கிண்கிணி பொருத்தப்பெற்ற வீசுகோல் இரண்டு கொண்டு வில் நாண் வடத்திலே தட்டும் போது சதங்கைகளும் மாறிமாறி ஒலிக்கும். தாளக் கருவியாகத் தட்டுவதற்கு சப்பளாக் கட்டைகளையும் பயன்படுத்துவார்கள்.

இயல், இசை, நாடகம் எனும் மும்மைத் தமிழும் இணையும் திறன் பெற்றது - வில்லிசைப் பாடலாகும். மறமாண்பினை உணர்த்தும் வில் அறப்பண்பில் பொருள் சேர் பாட்டுடன் கலந்து பண்ணோடு இயைந்து வில்லிசைப் பாடலாக மலர்ந்தது எனலாம். 'பாட்டிடைக் கலந்த பொருள வாகிப் பாட்டின் இயல் பண்ணதி இயல்பே' என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு வில்லிசைப் பாடலும் பண்ணும் பொருந்தி வருகின்றன. நா நவில் திறம் பெற்ற வில்லுப்பாட்டு நாட்டுப்புறப் பாடல் வகையைச் சார்ந்தது.

வில்லுப்பாட்டின் தாயகம் தென்தமிழ் நாடாகும். குறிப்பாகத் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தளவில் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், கலைமாமணி சாத்தூர்ப் பிச்சைக்குட்டி, இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரன், கவிஞர் சுப்பு ஆறுமுகம், பேராசிரியர் வீ. கே.துரைஅரசு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் முதல் நால்வரும் இலங்கைக்கு வந்து வில்லிசைக் கச்சேரிகளை நடாத்தி இக்கலைக்கு மதிப்புத் தேடித் தந்துள்ளார்கள். கவிஞர் சுப்பு ஆறுமுகம் இலங்கையில் பல வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளை யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் நடத்தி மக்களை பரவசப்படுத்தினார்.

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் இலங்கைக்கு வந்திருந்த வேளை அவரைப் பார்க்க சென்ற சின்னமணி கணபதிப் பிள்ளை, அவரின் ஆசீர்வாதத்துடன் தானும் வில்லிசைக் கலைஞராக உருவாகினார் என்று அவரே பேட்டியொன்றில் கூறியுள்ளார். தமிழ்நாட்டில் வில்லிசையில் முத்திரை பதித்தவர்களாக இருவரைக் குறிப்பிடலாம். ஒருவர் கலைமாமணி சாத்தூர் பிச்சைக்குட்டி. மற்றவர் கலைமாமணி சுப்பு ஆறுமுகம்.

சாத்தூர் பிச்சைக்குட்டியின் மாணவர்களாக எஸ்.எஸ்.ராஜேந்திரம் மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சபா.சதாசிவம் ஆகியோர் இருந்திருக்கின்றார்கள். இலங்கையரான சபா. சதாசிவம் பிச்சைக்குட்டியின் வில்லிசைக் குழுவில் இருந்து அவருடனும், தனிப்பட்ட முறையிலும் வில்லிசைக் கச்சேரிகளை நடத்தியுள்ளார். நாட்டுப்புற மக்களின் கலையாக எண்ணப் பெற்று கற்றவர்களால் மதிக்கப்பெறாதிருந்த வில்லுப்பாட்டினை நாட்டுப்புற மக்களும் கற்றவர்களும் ஒருநேரப் போற்றும் வண்ணம் கலைமாமணி சாத்தூர் பிச்சைக்குட்டி வில்லிசை பாடினார். இவர் மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளில் தமது வில்லிசைக் கச்சேரிகளை நடத்தியுள்ளார். வில்லுப்பாட்டுக் கலையின் முன்னோடிகளில் ஒருவராக விளங்கியவர் சாத்தூர் பிச்சைக்குட்டி. அவர் இக்கலையின் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியவர். ஆசியராகப் பணியாற்றிய இவர் இக்கலைமூலம் பெரும் புகழ் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

வில்லிசை வேந்தர் எனப் புகழப்படும் சுப்பு ஆறுமுகம் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்நாடு, சிங்கப்பூர், இலங்கை முதலாகப் பல நாடுகளிலும்

ஆயிரக்கணக்கான வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளின் மூலம் மக்கள் மனங்களைக் கொள்ளை கொண்டவர். வில்லுப்பாட்டின் சிறப்பையும் ஆற்றலையும் தனது அபார ஆர்வத்தினாலும் ஆற்றலாலும் உலகமே வியக்கம் வண்ணம் நிலை நிறுத்திப் பெருமை பெற்றவர். இதன் மூலம் தமிழ் இலக்கியத்திற்கும் தமிழ் நாட்டுப்புறக் கலைகளுக்கும் மிகச்சிறந்த பங்களிப்பை ஆற்றியுள்ளார். இவரது தனித்துவமான தமிழ் கலைப்பணியைப் பாராட்டி தமிழக அரசு 'கலைமாமணி' விருது வழங்கிக் கௌரவித்துள்ளது. தமிழில் பாண்டித்தியம் பெற்ற இவர் வில்லுப்பாட்டுகளைத் தாமே இயற்றி நிகழ்ச்சிகளை நடத்திவந்தார். என்.எஸ்.கிருஷ்ணனின் புகழ்பெற்ற 'மகாத்மாகாந்தி' வில்லுப்பாட்டையும் கவிஞர் சுப்பு ஆறுமுகமே ஆக்கியுள்ளார்.

கலைமாமணி சுப்பு ஆறுமுகத்தின் பிற்பட்ட கால வில்லிசைக் குழுவில் அவரின் குடும்பத்தவர்களே இருந்திருக்கிறார்கள். இவரது மகன் காந்தி, மகள் திருமதி பாரதி திருமகன், மருமகன் பேராசிரியர் திருமகன், பேரன் கலைமகன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இக்குழுவினரே 2005 இல் இலங்கைக்கு வருகை தந்து வில்லிசை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்கள்.

தொன்மங்களை மையமாகக் கொண்ட வில்லுப்பாட்டுக் கதைகளை நாட்டுக் சூழலுக்கேற்ப புதிய செயல்முறையில் உருவாக்கியவர் கலைமாணி பிச்சைக்குட்டி. இவர் 'சுதந்திர உதயம்' என்னும் வில்லுப்பாட்டை 1948 ஆம் ஆண்டு உருவாக்கினார். இதனை அவர் நவீன வில்லடி என்றும் சொல்லால் குறிப்பது உள்ளங்கொள்ளத்தக்கது என்று தஞ்சாவூர்தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தராயிருந்த முனைவர் இ.சுந்தரமூர்த்தி குறிப்பிட்டுள்ளார். இக்கலையைப் போற்றி வளர்த்த கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பணியும் நினைவு கூரத்தக்கது.

வில்லுப்பாட்டின் கதைகள் பல தலைமுறை தலைமுறையாக வாய்மொழியாகப் பாடப்பெற்றுள்ளன. பெரியவில் போன்ற இசைக்கருவிகள்; பக்கத்திலே துணையாகப் பிற இசைக்கருவிகள், வில்லுப்பாட்டுப் பாடுபவர் 'தந்தனத்தோம்' என்று சொல்லித் தொடங்கி முதலில் கடவுள் வாழ்த்துப் பாடி பின் சொல்லவந்த கதையைச் சொல்லுவார். பக்கத்தில் இருக்கும் கலைஞர்கள் ஆமாப் போடுவார்கள். சில கலைஞர்கள் கேட்கும் கேள்விகளுக்கு குழுத் தலைவர் நகைச் சுவை ததும்ப பதில் சொல்வார்கள். கதை சொல்லிக்கொண்டு போகும் போது இடையிடையே தெம்மாங்கு, காவடிச் சிந்து, ஒப்பாரி போன்ற நாட்டார் பாடல் மெட்டுகளிலே இசையுடன் பாடல்களைப் பாட துணைக் கலைஞர்களும் சேர்ந்து பாடும் போது ஓர் உற்சாகம் தோன்றி வில்லுப் பாட்டுடன் ஒன்றிவிடுவார்கள். வில்லினை இனிய ஓசையால் எழுப்பிப் பார்ப்போரையும் மகிழ்விக்கும் அற்புதக் கலையாக வில்லடிப்பாட்டு திகழ்கின்றது. வாத்தியக் கருவிகள் ஒன்றுமையுடனும் விரைவுடனும் இயங்கி நாதவெள்ளைத்தைப் பெருக்கும்போது, கதைப் போக்கிலே புதிய கட்டம் தொடங்கும். ஒவ்வொரு சமயமும் சந்தர்ப்பத்திற்குத் தகுந்த ஆர்வம், ஆவேசம், அபிநயத்துடன் முதன்மையானவர் பாடுவதால் கதை முழுவதும் உயிர்க் களை ததும்பி நிற்கும். வில்லிசைக் கச்சேரியின் இறுதியில் மங்களம்பாடும் வழக்கம் உண்டு. திருவிழாக் காலங்களில் கோயில்களிலும் மற்றும் கலை விழா மண்டபங்களிலும் வில்லிசை நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்துள்ளன.

இலங்கையிலும் வில்லிசைக் கலை வளர்வதற்குப் பலர் தமது பங்களிப்பை ஆற்றியுள்ளனர். இலங்கையைப் பொறுத்தளவில் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட வில்லிசை தொடக்க காலத்தில் உச்ச நிலையில் இருந்தாலும், காலப் போக்கில் நாட்டு நிலை காரணமாகவும், பழம் கலைஞர்களின் மறைவாலும், வயது வந்தவர்

கள் மூப்புக் காரணமாகக் கைவிட்ட நிலையிலும் பின்னடைவைக் கண்டுள்ளதென்றே கூறமுடியும்.

இலங்கையின் வில்லுப்பாட்டின் பிதாமகன் மட்டுநகர் தந்த மாஸ்டர் சிவலிங்கம். இருந்தும் இக்கலையை ஈழத்தின் பல பாகங்களுக்கும் முன்னெடுத்துச் சென்று பிரபல்யமாக்கியவர் ஆசிரியர் திருப்பூங்குடி வி.வி.கே. ஆறுமுகம் ஆவார். தாவடி வடிவேல், சின்னமணி கணபதிப்பிள்ளை, லடீஸ் வீரமணி, உடப்பு சோமஸ்கந்தர், மன்னார் என்.ராஜம் புஸ்பவனம், திருமலை சித்தி அமரசிங்கம், சோக்கல்லோ சண்முகநாதன், இராசையா ஸ்ரீதரன், வானம்பாடி வியாகேசு யோகராசா, சிவயோக சமாஜ சாம்பசிவம் ஆகியோர் வில்லிசையை முன்னெடுத்துச் சென்றவர்களில் முக்கிய மானவர்கள். மேலும் சைவப்புலவர் சு.செல்லத்துரை, செல்வி சற்சொரூபவதிநாதன், கலகா சுப்பிரமணியம் திருச்செந்தூரன், மட்டுநகர் முனாக்கானா ஆகியோர் தமது பங்களிப்பை வழங்கியுள்ளார்கள். அதுமட்டு மல்லாமல் உடப்பு சோமாஸ்கந்தரின் மகள், வானம்பாடி வி.யோகராசாவின் மகன் தினேஸ் ஆகியோர் தந்தை வழி நின்று வில்லுப்பாட்டை முன்னெடுத்துச் செல்வது ஆரோக்கியமான செயற் பாடாகும். அவர்களின் பணி தொடரவேண்டும்என்பதே கலையார்வம் கொண்டவர்களின் எதிர்பார்ப்பாகும்.

சின்னமணி கணபதிப்பிள்ளை மேடை பல கண்டவர். உலக நாடுகள் பலவற்றில் தமது வில்லிசைக் கச்சேரிகளை நடத்தி இலங்கைக்குப் புகழ் தேடித் தந்தவர். இவர் தமது பேட்டி ஒன்றின்போது தனது சிஷ்யன் சோக்கல்லோ சண்முகநாதன் என்று கூறியுள்ளார். அந்தளவுக்கு சோக்கல்லோ சண்முகநாதன் வில்லிசைக் கலையைப் போற்றிப் பாதுகாத்து வருகின்றார். எமது பாரம்பரியக் கலைகள் அழிந்துவிடக் கூடாதே என்ற ஆதங்கத்துடன் செயலாற்றியவரும் சோக்கல்லோ சண்முகநாதனின் சேவையைக் கலை உலகம் என்றும் மறந்துவிடாது. தற்பொழுது கனடாவிலிருந்து செயற்படுகின்றார்.

மஹாகவி எழுதிய 'கண்மணியாள் காதை' என்ற காவியத்தை வில்லுப்பாட்டில் தந்தவர் லடீஸ் வீரமணி அவர்கள். இதன் மூலம் புகழும் பெற்றார். உடப்பு சோமாஸ்கந்தரும் பிரசித்திபெற்ற வில்லிசைக் கலைஞராகச் செயற்பட்டார். மலையகத்தைச் சேர்ந்த கலைஞர்களும் வில்லிசைக் கலையில் ஈடுபாடுகாட்டியிருந்தபோதிலும் முறையான தகவல்களைப் பெறமுடியாமல் இருக்கின்றது. இச்சிறப்பு மிகு கலையை அழிந்துவிடாது பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு எம் மக்களைச் சார்ந்தது.

பாடசாலைகள் தங்கள் பங்களிப்பை தமிழ்த்தினப் போட்டிகள் மூலம் எடுத்துக் காட்டிய போதிலும் அவர்கள் மத்தியில் இதை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற தாக்கம் ஏற்படவில்லை என்றே கூற வேண்டும். வருங்காலத்தில் வில்லிசைக் கலையின் வளர்ச்சிக்கு, இக்கலை மேல் பற்றுதலுள்ள அனைவருமே தத்தமது பங்களிப்பையும் ஆதரவையும் வழங்குவார்கள் என நம்புவோம். ●


**'தாயக ஒலி' சந்தா விவரம்**

ஒரு வருடச் சந்தா – ரூபா 600 (அஞ்சல் செலவுடன்)
வெளிநாடு – $ 25 (U.S) ”

உங்கள் தாயக ஒலியின் வளர்ச்சிக்குச் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரவு நல்குங்கள்.

தொடர்பு :

த.சிவசுப்பிரமணியம்
9-2/1, நெல்சன் பிளேஸ்,
கொழும்பு - 06.
இலங்கை
தொ.இல. 071 8676482

சி.சரவணபவன்
காரைக்கால் ஒழுங்கை,
இணுவில் கிழக்கு,
சுன்னாகம், இலங்கை.
தொ.இல. 077 3126802

வங்கிக் கணக்கு விவரம்:
வங்கி/Bank : Commercial Bank - Wellawatte
A/C No: 8100086490

# மார்க்சிய உளவியலை முன்னெடுத்த எரிக் புரோம்

சமூகம் பற்றிய நம்பிக்கை மேலோங்கல் கொண்டவராக எரிக் புரோம் என்னும் சிந்தனையாளர் விளங்கினார். மனிதரிடத்துப் பொதிந்துள்ள உள்ளார்ந்த ஆக்கும் திறன்களைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தார். ஒவ்வொருவரிடத்தும் அந்தத்திறன் உட்பொதிந்திருத்தலையும் விளக்கினார். மேலாதிக்க விழுமியங்களுக்கு மனிதர் கட்டுப்பட்டு நடத்தலையும் அதீத சுயநலப் போக்கு வலிமை பெற்றிருத்தலையும் சுட்டிக் காட்டினார். வாழ்தல் நயப்புக்கும் வாழ்தல் வெறுப்புக்கும் இடையே நிகழும் தெரிவை அடியொற்றியே சமூக அறவொழுக்கம் உருவாக்கம் பெறுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வலுவேற்றமும் வலுவின்மையும் மனிதரிடத்தே நிலவுகின்றன.நிறைவும் நிறைவின்மையும் காணப்படுகின்றன. அவ்வாறான முரண்பாடுகளை அடியொற்றியே சமூக ஒழுக்கமும் ஆளுமையாக்கமும் முகிழ்த்தெழுகின்றன. சமூகமயமாக்கலாலும் சமூகத்தைத் தழுவிக் கொள்ளலாலும் ஆளுமை உருவாக்கம் நிகழ்கின்றது. அந்த இரண்டு செயற்பாடுகளையும் 'அறிபரவல்' (ORIENTATIONS) என்ற எண்ணக்கருவினால் அவர் எடுத்துக் காட்டியுள்ளார். மனிதர் ஒவ்வொருவரிடத்தும் உட்பொதிந்துள்ள விளைவுதரும் ஆக்கச் செயற்பாட்டை புரோம் குவியப்படுத்தி ஆய்வை முன்னெடுத்தார்.

உளப்பகுப்பு உளவியலை மார்க்சிய கண்ணோட்டத்தில் நோக்கிய வேளை அவர் முன்வைத்த பின்வரும் கருத்துக்கள் நவீன உளவியலில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. உளவியலை தனி மனித வரிச்சுக்குள் கட்டுப்படுத்தி வைக்காது சமூக இயங்கியல் தரிசனங்களுக்குள் புரோம் கொண்டு வந்தமை மிக முக்கிய அறிவு முன்னெடுப்பாகும். உளவியல் ஆய்வுகளை வரலாற்றுடன் தொடர்புபடுத்தியமை புரோம் மேற்கொண்ட பிறிதொரு முக்கிய பங்களிப்பாகக் கருதப்படுகிறது. சமூக வரலாற்று வளர்ச்சியோடு மனித உளக் கோலங்களைத் தொடர்புபடுத்தி நோக்கியமை உளவியல் ஆய்வு வரலாற்றில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியாகும்.



உளப்பகுப்பியல், உளவியலிலே பெரும் சிந்தனை வரிசையாக உருவாக்கம் பெற்றது. அதேவேளை உளப்பகுப்பியலைத் திறனாய்வுக்கு உட்படுத்தி புதிய சிந்தனையாளர்கள் உளவியல் வரலாற்றிலே தோற்றம் பெற்றனர். அவர்களுள் முக்கியமானவராக எரிக் புரோம் விளங்குகின்றார். அவரை நவ உளப்பகுப்புவாதியாக ஒரு சாராரும் நவமார்க்சியவாதியாக இன்னொரு சாராரும் அடையாளப்படுத்துகின்றனர். ஆனால் அவருடைய மிகப் பெரும் பங்களிப்பு மார்க்சிய நோக்கில் உளப் பகுப்பியலைத் தரிசித்தமையாகும். அந்தத் தரிசனத்திலே பல மட்டுப்பாடுகள் காணப்பட்டாலும் அவருடைய நோக்கு உளவியலிலே மாற்று வகையான அணுகுமுறைகளுக்கு வழி வகுத்தது. மார்க்சிய உளவியல் மேலும் எழுச்சி கொள்வதற்குரிய பன்முகப் பார்வையை அவர் முன்னெடுத்துள்ளமை ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும்.

# சீனாவில் இளசுகளின் தாய்ப்பால் மோகம்

## கறவைப் பசுக்களாகும் சீனப் பெண்கள்

சில சமயங்களில் சிலர் மத்தியில் சில விடயங்களைச் சொன்னால் அதைக் கேட்பவர்களில் ஒருவர் " சொல்லுவதைக் கேட்டு அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை" எனக் கூறுவதை உங்களில் பலர் காதில் போட்டிருப்பீர்கள். நான் எழுதும் விடயத்தைப் படிப்பவர்களும் அதேபோன்ற எண்ணத்தை ஏற்படுத்தலாம் . ஆனால் இந்த விடயம் முழுக்க முழுக்க உண்மையான ஒன்று. சந்தேகம் இல்லாமல் சந்தோஷமாகப் படியுங்கள்.



**பொன். பாலா**

சீனாவில் ஏற்பட்டுள்ள தாய்ப்பால் மோகம் பற்றியது இந்த விடயம். வறுமைக் கோட்டுக்குள் வாழும் சீனப் பெண்கள் கறவைப் பசுக்களாக மாறி உள்ளனர்.

தாய்ப்பாலின் போஷாக்கையும், அதன் புரதச் சத்தையும், உடம்பைத் திடகாத்திரமாக வைத்திருக்கும் தன்மையையும் அறிந்த சீனர்கள் தாய்ப்பாலைப் புட்டிகளில் அடைத்து விற்பனை செய்ய ஆரம்பித்தார்கள். ஆரம்பத்தில் மகப்பேற்றுக்குப் பின்னர் தாய்ப்பால் சுரக்காமல் கஷ்டப்பட்ட தாய்மார்கள் இந்தத் தாய்ப்பால் புட்டிகளை வாங்கி தமது பிள்ளைகளுக்குக் கொடுத்து உயிரைக் காப்பாற்றினார்கள்.

சீனர்களின் தாய்ப்பால் புட்டிகள் உலகில் ஓரிரு நாடுகளின் கவனத்தில் பட்டு அவையும் இத்தொழிலை ஆரம்பித்தன. ஆனால் அந்த நாடுகளில் தாய்ப்பால் வியாபாரம் அவ்வளவு சூடு பிடிக்கவில்லை.

காரணம் சீனாவில் வறுமைக் கோட்டின் கீழ் லட்சோபலட்ச மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் தமது வாழ்க்கையின் கஷ்ட நிவாரணியாகத் தமது பிள்ளைகளின் வாழ்க்கையைப் பணயம் வைத்துத் தாய்ப்பாலை விற்றனர். மற்ற நாடுகளில் இந்த வறுமை நிலை இல்லை. அதனால் பால் வியாபாரம் செய்வதற்குப் பெண்கள் முன்வரவில்லை. அது போக இப்பால் வியாபாரத்தைக் கௌரவக் குறைவாகவும் நினைக்கிறார்கள்.

இது ஒருபுறமிருக்க, சீனாவில் இந்தத் தாய்ப்பால் மோகம் ஒரு திருப்பு முனை அல்லது திரிசங்கு நிலைக்கு வந்திருக்கிறது. சீன நகர் ஒன்றிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்று வெளியிட்டுள்ள விளம்பரம் நகர உயர்மட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

"தாய்ப்பால் விரும்பிகள் தொகை முட்டி மோதிக் கொண்டிருப்பதால் தாங்கள் ஒரு புது முறையை அறிமுகம் செய்திருப்பதாகவும் இதனால் பயன் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளலாம்" எனவும்

விளம்பரத்தில் தெரிவித்திருந்தனர்.

தாய்ப்பால் தாசர்கள் புட்டிகள் மூல மும், தாய்மார்களிடமிருந்து நேரடியாகவும் தாய்ப்பாலைப் பருகுவதற்கு வசதி உள்ள தாகவும் கூறப்பட்டதைத் தொடர்ந்து பணம் படைத்த இளவல்கள் தாய்ப்பால் நோக்கிப் படையெடுக்க ஆரம்பித்துவிட்ட னர்.

இப்படித் தாய்ப்பால் விற்பனைக்குத் தயாராக உள்ளவர்கள் வறுமையில் வாடும் சீன மாதர்கள்தான் என்பதும் தெரிய வந் துள்ளது. சீனாவில் பெண்கள் மதிக்கப் படுவதில்லை என்றும், உரிமைகள் இல் லாதவர்களாக வாழ்வதாகவும், இந்தப் பால் வியாபாரம் பெண்களின் உரிமையை மோசமாக்குவதாகவும் எதிர்ப்பொலிகள் கிளம்பியுள்ளன.

தாய்ப்பாலை இப்படி அனுபவிப்பதற்கு 2000 முதல் 4000 டொலர் வரை கட்டணம் செலுத்த வேண்டும். இவ்வளவு பணத் தையும் சாதாரண மக்களால் கொடுக்க முடியுமா? இல்லை. அதனால் செல்வந் தர்களின் இளவட்டங்கள்தான் முட்டி மோதி முன்னுக்கு நிற்கிறார்கள்.

மாதர் அமைப்புக்கள் இப்பால் விற்ப னைக்கு எதிராகப் போர்க்கொடி பிடிக்க ஆரம்பித்திருப்பதால் உடல் உறுதிக்குத் தாய்ப்பால் அவசியம் என்பதை அறிந்த இளசுகளின் தாகம் எவ்வளவு காலம் நீடிக் குமோ தெரியவில்லை. காலம் மாறிப் போச்சு!

# இலக்கியத் துறைக்கான தமிழ்ச்சங்க விருதுபெற்ற எழுத்தாளர் ச.முருகானந்தன்



கிளிநொச்சித் தமிழ்ச் சங்கம் மூத்த எழுத்தாளர் ச.முருகா னந்தனுக்கு **'இலக்கிய வித்தகர் விருது'** வழங்கிச் சிறப்பித்துள் ளது. 35 வருடங்களுக்கு மேலாக தமிழ் இலக்கிய துறையில் பல்வேறு ஆக்கங்களை வெளியிட்ட இவரது இலக்கியப் பணி யைக் கௌரவித்து இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. சிறுகதை, கவிதை, குறுநாவல், விமர்சனம், மருத்துவம், சினிமா என பல துறைகளில் ஆக்கங்களை இலங்கை, இந்தியா மற்றும் புலம் பெயர் நாட்டுச் சஞ்சிகைகளில் வெளிக்கொணர்ந்துள்ளார்.

பல்வேறு போட்டிகளில் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதி யாகவும் முப்பத்தைந்து பரிசில்களுக்கு மேல் பெற்றுள்ள இவர் தனது **'தலைமீன்கள்'** சிறுகதைத் தொகுதிக்காக இலங்கை அரசின் சாகித்திய மண்டல விருதினையும் பெற்றுள்ளார். கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் தனது மருத்துவ சேவையை பின்தங்கிய பிரதேசங்களில் ஆற்றிய பின்னர் அரச சேவை யிலிருந்து ஓய்வுபெற்று கொழும்பில் தனியார் துறையில் பணியாற்றுகிறார். இலங்கை இலக்கியப் பேரவை விருது, வடக்கு - கிழக்கு மாகாண விருது, தகவம் விருது, கனக செந்தி நாதன் கதா விருது, சென்னை இலக்கிய சிந்தனை பரிசு உட்பட பல்வேறு கௌரவிப்பு களைப் பெற்றுள்ளார். இவரது சிறுகதைகள் ஹிந்தி, தெலுங்கு, சிங்களம் ஆகியவற்றில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி தமிழ்ச் சங்கம் நடத்திய வருடாந்த திருவள்ளுவர் விழாவில் வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சர் குருகுலராஜா அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு இவருக்கான விருதினை வழங்கிச் சிறப்பித்தார்.

# நோபல் பரிசுபெற்ற ரவீந்திரநாத் தாகூரின் 'கீதாஞ்சலி'க் கவிதை ஒன்றின் தமிழாக்கம்

"எங்கே மனம் அச்சமற்று
விளங்குகிறதோ
எங்கே தலை கம்பீரமாய்
நிமிர்கிறதோ
எங்கு அறிவு சுதந்திரத்துடன்
பொலிகிறதோ
எங்கு குறுகிற சாதிமதப் பிளவுகளால்
உலகம் உடையாமல்
உருப்பெறுகின்றதோ
எங்கு உண்மையின் ஆழத்து
சொற்கள் உதயமாகின்றனவோ
எங்கே தளரா முயற்சி
பரிபூரணத்தை நோக்கி கைகளை
நீட்டுகிறதோ
எங்கு பகுத்தறிவெனும் தெளிந்த
நீரோடை
மூடப்பழக்கவழக்கப் பாலை மறைவில்
பாயாது மீள்கிறதோ
எங்கே
என்றென்றும் விரிந்து செல்லும்
எண்ணத்தை, செயலை நோக்கி
என் உள்ளத்தை நின் அருள்
அழைத்துச் செல்கிறன்றதோ
அந்த சுதந்திர சுவர்க்கத்தில்
என் தந்தையே
எனது தேசம் விழித்தெழுவதாக!"



வங்காள மொழியிலே தாகூரினால் எழுதப்பட்ட பாடல்களை 'கீதாஞ்சலி' என்னும் பெயரில் ஆங்கில மொழியில் அவரே மொழிபெயர்த்தார்.

இந்தியா அந்நியர் ஆட்சியில் அடிமைப்பட்டிருந்த காலப் பகுதியில் வாழ்ந்த வங்கக் கவிஞரும் தமிழ்க் கவிஞரும் தங்கள் கவிவரிகளால் சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டியுள்ளனர்.

**தாகூரின் கவிதை வரிகள் அப்படி அமைய, புதுயுகக் கவிஞன் பாரதி இப்படிக் கூறுகின்றார்.**

"செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே"

"என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்
வென்றி தருந்துணை நின்னரு என்றோ?
மெய்யடி யோம் இன்னும் வாடுதல் நன்றோ!"



# இணுவில் ஒலி அறிமுக விழா ஆய்வுரை



விழாவுக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருக்கும் வவு னியூர் இரா.உதய ணன் அவர்களே!

'இணுவில் ஒலி' சஞ் சிகையின் ஆசிரியர் தம்பு சிவா அவர்களே மற்றும் பேச்சாளர்களே! மற்றும் வருகை தந்தி ருக்கும் அனைவருக்கும் எனது அன்பு வணக் கம்!

கடந்த ஒரு வருடத்தில் எழு இணுவை ஒலி என்ற இரு திங்கள் ஏடுகள் வெளியாகியுள் ளன. 'பொங்கல் மலர்' 'லண்டன் சிறப்பிதழ்' உட்பட நான்கு இதழ்களைத்தான் என்னால் பார்க்க முடிந்தது. அதனூடாக எனது ஆய்வு ரையை மேற்கொள்ளலாம் என நம்புகிறேன்.

திரு.தம்புசிவா அவர்களை ஆசிரியராகக் கொண்டு **'இணுவில் ஒலி'** என்ற **இரு திங்கள் சஞ்சிகை,** இணுவில் என்ற பாரம்பரிய சைவ தமிழ்ப்பிரதேசத்தின் ஒலியாய், ஒளியாய், ஊற் றாய், ஒளிப்பேழையாய் திகழ்கின்றது. சைவ மும் தமிழும் கைகோர்த்து வளர்ந்த இணுவில் மண்ணில் **இசையும் கலையும், அறிவும் புலமை யும், அறமும் இறைபக்தியும்** செழித்து வளர்ந் திருப்பதை நாம் காணலாம்.

ஈழத்தின் இலக்கிய வரலாற்றில தனி இடம் வகிக்கும் **சின்னத்தம்பிப் புலவர்** என்னும் பேரறிஞன் தோன்றிய செழுமை மிக்க மண் இது. **'பஞ்சவன்னத்தூது', 'கோவலன் நாடகம்', 'நொண்டி நாடகம்', 'அனிறுத்தன் நாடகம்'** ஆகியன சின்னத்தம்பிப் புலவரின் படைப்புக்கள் ஈழத்து இலக்கிய வரலாற்றில் சிறப்புமிக்க வையாக அமைந்துள்ளன.

தவில் இசையில் தன்னிகரற்ற சக்கரவர்த் தியாகத் திகழ்ந்த **வி.தட்செணாமூர்த்தி இணு வில் மண்ணின் புகழ்பூத்த மன்னன்.** அவரின் வழியில் தவிலுக்கு பெருமை சேர்த்தவர் **இணு வில் சின்னராசா** ஆவார்.

ஆடற்கலையின் ஆசானாகத் திகழ்ந்தவர்



**நவஜோதி ஜோகரட்னம்**
***லண்டன்.***

**இணுவையூர் ஏரம்பநாதர் சுப் பையா.** திருமதி திரிபுரசுந் தரி யோகானந்தம், கலைஞர் வேல் ஆனந்தன், திருமதி கமலா ஜோன் பிள்ளை, பிரமஸ்ரீ வீரமணிஐயர், செல்வி சாந்தா பொன்னுத்துரை, திருமதி கிருஷாந்தி இரவீந் திரா என்று ஆற்றல் மிக்க அவரது மாணவ நடனக் கலைஞர்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும்.

**சங்கீத வாக்கேயக்காரரான வீரமணிஐயர்** இணுவில் மண்ணின் தனி முத்திரை. (அவரின் மாணவி என்ற பெருமை எனக்குமுண்டு) க.சண் முகப்பிள்ளை மற்றுமொரு உன்னத கலைஞர். **இணுவைத் தவஞானி எனப்படும் பெரிய சந்நி யாசியார் ஈழத்தின் பெரும் சித்தன்.** இவரின் வாக்கு அருள் வாக்காகவே கருதப்பட்டது. இத் தகைய தவஞானிகளும், இசைஞானிகளும், இலக்கிய ஞானிகளும் தோன்றிய இணுவை மண்ணில் நவீன இலக்கிய கர்த்தாக்களும், கல்விமான்களும் தொடர்ந்து பணியாற்றி வருவ தில் வியப்படைய எதுவுமில்லை. **ஆர்.சிவ லிங்கம் என்னும் உதயணன், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், இணுவூர் மயூர ணன், தம்பு சிவா** ஆகிய நவீன சிறுகதை எழுத்தாளர்களும் இணுவை மண்ணிற்குப் புகழ் சேர்த்து வருகின்றனர்.

இணுவில் ஒரு விவசாயக் கிராமமாக இருந் தாலும், தொழில் அதிபர் **பொ.நடராசா** அவர் கள் அண்ணா தொழிற்சாலை என்ற ஸ்தாப னத்தை நிறுவி யாழ்பாணத்துத் தொழில் அதி பராகத் திகழ்வது இணுவிலுக்குப் பெருமை சேர்க்கின்ற ஒரு விடயம். தொழில் அதிபராக மட்டுமன்றி யுத்த காலத்தின்போது இடம்பெற்ற இடப்பெயர்வுகளின்போதெல்லாம் மக்களுடன் இருந்து, அவர்கள் உணவின்றித் தவிக்கும் போதெல்லாம் அவர்களுக்கு உணவு அளித்து

உதவ முன்வந்த உள்ளம், இணுவில் மண்ணின் விசாலமான மனதிற்குச் சொந்தமாகும்.

நம் காலத்தில் பெரும் சான்றோனாக வாழ்ந்த பண்டிதர் நா.இராசையா, தமிழவேள் இ.க.கந்தசுவாமி ஆகியோரின் இலக்கியப் புலமையின் வரிசையில் உயர்ந்து நிற்கும் **பேராசிரியர் சபா ஜெயராஜா** இணுவையூர்ச் சிறப்பின் ஒளி விளக்காகத் திகழ்கின்றார்.

**கல்வியியல், உளவியல், திறனாய்வு, இசை, நடனம் ஆகிய துறைகளில் பன்முக ஆளுமை காட்டும் பேராசியரியர் சபா.ஜெயராஜா அவர்கள் 86 அரிய நூல்களை எழுதி வெளியிட்டிருப்பது அவரது அறிவுப் புலமையினை வெளிப்படுத்துவதாகும்.** அதேபோன்று 'இணுவில் ஒலி' என்ற சஞ்சிகையின் ஆசிரியராகத் திகழும் **தம்புசிவா** அவர்கள் சிறந்த சிறுகதை ஆசிரியராக, முற்போக்குச் சிந்தனைகள் தழுவியவராக **இணுவில் மண்ணிற்கும், புலம்பெயர் இணுவில் சமூகத்திற்கும் உறுதியான தொடர்புப் பாலமாகத் திகழ்ந்து வருகின்றார்.**

புராதனப் பெருமை கொண்ட சைவ ஆலயங்கள் மலிந்த இணுவில் என்ற அழகிய சிறிய கிராமத்தின் வரலாற்று ஆவணமாக 'இணுவில் ஒலி' என்ற இந்த சஞ்சிகை திகழ்கின்றது.

ஐரோப்பிய நாடுகளில் சின்னஞ்சிறு பிரதேசமும், கிராமமும் தங்களுக்கென தனித்துவமான வரலாற்றினை பேணிப் பாதுகாத்து வருவதைக் காணலாம். தங்கள் கிராமத்தின் முக்கிய ஆளுமைகளை சிலை வடிவில் அமைத்தும், அருங் காட்சியங்களை நிறுவியும் புராதன சரித்திரம் கொண்ட கட்டிடங்களைப் பேணியும், முக்கிய கலைஞர்கள் வாழ்ந்த இடங்களை சுற்றுலா மையமாக்கியும் தங்களின் சரித்திரத்தை உலகிற்கு உணர்த்த முனைகின்றார்கள்.

தமிழர்களின் வாழ்விடம் அழிந்து போய்க் கொண்டிருக்கின்ற சூழலில் இணுவில் என்ற இந்தச் சின்னக் கிராமத்தின் அருமை பெருமைகளையும், வாழ்ந்து மறைந்த கல்விமான்களை எடுத்துரைப்பதிலும், அவர்களின் மகிமையைப் பேணுவதிலும் 'இணுவில் ஒலி' முக்கிய கவனம் எடுத்துச் செயற்பட்டு வருகின்றது.

உலகெங்கிலும் இணுவிலைச் சார்ந்த மக்கள் பரந்து வாழ்ந்த போதிலும் அவர்களை ஒருங்கிணைத்து இணுவில் நலன் பேணும் வகையில் இந்த அரிய பத்திரிகை முயற்சியை மேற்கொண்டுவரும் தம்புசிவா அவர்கள் நமது பாராட்டுக்குரியவர்.

இணுவில் ஒலி 2வது வருடத்தில் தடம் பதித்துள்ள இவ்வேளையில் இச் சஞ்சிகையின் அறிமுகவிழாவும், இச்சஞ்சிகையில் காத்திரமான பதிவுகளை வழங்கும் இணுவையூர் சபா ஜெயராஜா அவர்களுக்கு பாராட்டு விழாவும் வைப்பது மிகப் பொருத்தமாகவே இருக்கின்றது.

இச்சஞ்சிகைகளில் 24ற்கும் மேற்பட்ட சிறந்த கட்டுரைகள், சிறுகதை குட்டிக்கதைகள் என்று ஏழு சிறுகதைகள், கவிதைகள் 6, திறனாய்வுக் கட்டுரைகள் ஏனையவை என்று 17 கட்டுரைகள், மாணவர் உலகம், இலக்கியம், அறிவியல், விளையாட்டு என்று பல்வேறு விடயங்கள் விரவிக் காணப்படுவதை என்னால் பார்க்க முடிந்தது.

ஒவ்வொரு அட்டைப்படமும் மிக நேர்த்தியாகவும் கவர்ச்சியாகவும் பல்வேறு வடிவங்களை உணர்த்தி நிற்பது பாராட்டுக்குரியது. தமிழகத்தின் பிரபல ஓவியர் மாருதியின் கைவண்ணத்தில் மிளிர்ந்தாலும் ஈழத்து ஓவியர்களை தேடிப்பிடிக்கவில்லையா என்ற கேள்வியும் எனக்குள் எழுந்தது.

சிறுகதைகள் **இரா.உதயணனின் 'திசை மாறும் புத்திரர்கள்'** மிக இலகுவாக சிறுகதையை வடிக்கும் ஒரு புதிய பாணியைப் பார்க்க முடிந்தது. லண்டனில் இடம்பெறும் சமூகத்தின் பிரச்சினைகளை தனது கதைகளில் தற்போது வெளிக்கொணர்வதாகக் கூறியிருந்தார். இதேபோன்று **'பயணம்' என்ற பரிசுபெற்ற சிறுகதை இடம்பெற்றுள்ளது.** எழுதியவர் தம்பு சிவாவின் மகள் மாதுமை. அவர் சிறந்த பெண் எழுத்தாளர் என்ற வகையில் நான் பெருமைப்படுகின்றேன். இயல்பான சமுதாயத்தின் பார்வையை அவரின் கதையில் தரிசிக்க முடிகின்றது. அவர் ஒரு இணுவையூர் பெண் எழுத்தாளர் என்ற பெருமையோடு, இணுவையூரைச் சேர்ந்த கலாபூஷணம், **பண்டிதை திருமதி வை.கணேசபிள்ளை என்ற** குறிப்பையும் என்னால் பார்க்க முடிந்தது. அவர் பற்றிய தக

வல்களை வெளியிட்டால் சிறப்பாகவிருக்கும்.

'இணுவில் ஒலி' 7வது இதழில் **'பூப்பும் பறிப்பும்' என்ற எனது சிறுகதை** ஒன்று இடம்பெற்றுள்ளது. பலர் பாராட்டியிருந்தார்கள். உண்மையில் நடந்த ஒரு சம்பவத்தைத் தழுவித்தான் எழுதியிருந்தேன். எதுவித புனைவோ அல்லது கற்பனையோ கிடையாது.

பொங்கல் சிறப்பு இதழில் **இ.வடிவேல், செல்வி ச.சுரமி, சி.தக்ஷாயணி, ம.லிந்துசா** போன்ற பல கவிஞர்களின் கவிதைகள் இடம் பெற்றிருக்கின்றன. மாணவர்கள் கவிதையில் இணுவையூரைத் தோய்த்து எழுதுவது மகிழ்ச்சியாகவுள்ளது.

**ஏரம்பநாதர் சுப்பையா, வி.தட்செணாமூர்த்தி** போன்ற தலைசிறந்த கலைஞர்கள் குறித்து பேராசிரியர் சபா ஜெயராசாவின் கட்டுரைகள் மிகப் பயனுள்ள கட்டுரைகளாகும். அதே போன்று **'இணுவை ஆனந்தர்'** குறித்து **பேராசிரியர் கோபன் மகாதேவாவின்** கட்டுரை மிகச் சிறந்த தகவல்கள் தரும் கட்டுரையாகும். **கலாபூஷணம், புலவர்மணி வை.க.சிற்றம்பலம்** குறித்து **சி. மணிமாறனின்** கட்டுரையும் சிறப்பானதாகக் குறிப்பிடலாம். கட்டுரையாளர்கள் குறித்த நபர் பற்றிய தகவல்களை வழங்கும் போது **அவர்களின் பிறப்பு இறப்பு ஆண்டுகளை ஆரம்பத்தில் குறிப்பிட்டு வழங்கினால் வாசகனுக்கு இலகுவாக விருக்கும்.**

மிக நல்லதொரு முயற்சியாக இச்சஞ்சிகை வெளிவந்துகொண்டு இருக்கிறது. இதற்கு எல்லா மக்களும் கூடிய கவனம் செலுத்தி ஊக்கமளிக்கவேண்டும். பெருமைப்படும் வகையில் 'இணுவில் ஒலி' தொடர்ந்து வெளிவந்து சாதனை படைக்க வேண்டுமென வாழ்த்துக்கள் கூறி நன்றியுடன் விடைபெறுகின்றேன்.

---

# உங்கள் விருந்து

## இணுவில் ஒலி தொடர்பானது

*'இணுவில் ஒலி' கிடைக்கப்பெற்றேன் மிக்க சந்தோசம். தரமான படைப்புகள், காலத்திற்கேற்ற தகவல்கள், வாழ்த்துக்கள்*

*"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்*
*நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"*

*இணுவில் ஒலியின் மகுடவாசகத்தினை வாசிக்க, வாசிக்க தாயக மண்ணின் மகத்துவம், நாளாந்தம் தாயக மண்ணில் படும் வேதனை உணர்வுடன் இணைகின்றன.*

*'தாயக மண்ணின் தனித்துவம் காக்கும்..." இந்த வசனம் ஒவ்வொரு தமிழனின் இதயத்திலும் இருக்க வேண்டியவை "இணுவில் ஒலி"யின் சிந்தனை ஈழத்தில் வாழும் எமக்கு ஒரு வழிகாட்டி.*

*தாயக மண்ணின் தனித்துவத்தை காக்காமல் நாம் எதைச் செய்தாலும் பிரயோசனமில்லை அந்த வகையில் "இணுவில் ஒலி" முதலாம் இடத்தில் நிற்கிறது.*

**கதிரவன்**
புதுக்குடியிருப்பு (E.P)
*மட்டக்களப்பு*

---

*'தாயக ஒலி' புதிய பெயர் பொதுமையாக இருப்பதுடன் மனதுக்கு நிறைவையும் தருகின்றது. மல்லிகையின் பங்களிப்பு விட்ட வெற்றிடத்தை தாயகஒலி நிரப்பும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது. வாசிப்புப் பழக்கம் அருகிவரும் இன்றைய கால கட்டத்தில் மாணவர்களையும் உள் வாங்கும் சிந்தனை வரவேற்கத்தக்கது. அதேவேளை இலக்கியத் தரமான ஆக்கங்களையும் தொடர்ந்து வெளியிடுங்கள். ஆற்றல், ஆளுமை, திறன்மிக்க தங்களால் தாயக ஒலியை பெயர் சொல்லும் ஒரு சஞ்சிகையாக வெளிக்கொணர முடியும்.*

*முயற்சி திருவினையாக்கும். வாழ்த்துக்கள்.*

**Dr.ச.முருகானந்தன்**
வெள்ளவத்தை

அன்பின் தம்பு சிவா அவர்களுக்கு,

மறைந்த தமிழவேள் கந்தசுவாமி அவர்கள் கிட்டத்தட்ட இருபது ஆண்டுகளுக்கு முன் 28.10.94 இல் எனக்கு எழுதிய கடிதம் என்னிடம் உள்ளது. இணுவிலைச் சேர்ந்த அவரது கடிதம் உங்களின் தாயக ஒலி இதழில் பிரசுரம் பெறுவதற்கு உரிய ஆவண அந்தஸ்து கொண்டது என்று கருதுகிறேன். உங்களுக்கு விருப்பமெனில் அந்த கடிதத்தை அனுப்பி வைக்கிறேன்.

நன்றி

அன்புடன்

மு.நித்தியானந்தன் (இலண்டன்)

**கொழும்புத் தமிழ்ச் சங்கம்**

*28.10.1994*

*திரு.மு.நித்தியானந்தன் அவர்கள்,*
*கேர்க்பிளென் - 26*
*4651, அன் ஸ்ரீன்பெர்யென்,*
*நெதர்லாந்து.*

*ஐயா,*

*இலங்கையில் அண்மையில் வெளிவந்த 'மலையருவி' என்னும் இதழ் பற்றி ஆய்வுரை ஒன்று தினகரன் ஞாயிறு இதழில் வெளிவந்தது. இதனைத் தாங்கள் எழுதியிருக்கிறீர்கள். அனைத்து வகையிலும் ஆராய்ந்து நிறைவான சிறந்த ஆய்வுரையை எழுதியிருக்கிறீர்கள்.*

*உலகளாவிய பரந்த சிந்தனையோடு உயர்ந்த நோக்கங்களுக்காக மலையக மாணவர் தமிழ்த் தேர்வுகள் நடத்தப் பெற்றன. இதேவகையிலேயே மலையருவி ஆக்கம் பெற்றது. மலையக மாணவர்க்காகத் தேர்வு நடத்திக் கல்வியில் ஊக்கந்தரவேண்டும் எனச் சிறிய அளவில் உருவான முயற்சி வளர்ந்து வரலாற்றில் நிலைபெறும் சிறப்புப் பெற்றது சிந்தனைக்குரியது.*

*இக்கருத்தை முதலிற் தெரிவித்து ஊக்கம் தந்தவர் வீரகேசரி துணை ஆசிரியர் திரு வ.தேவராஜ் அவர்கள். ஆலோசனை வகுத்து நிகழ்ச்சியில் பங்குபற்றினார். செயலாற்றும் பொறுப்பு எனக்கு உரியதாக இருந்தது. இதனை வளர்த்து கண்டி விழாவைச் சிறப்பாக நடத்தியவர் எழுத்துலக அறிஞர் திரு. எச்.விக்கிரமசிங்க அவர்கள். மலையருவியை சிறப்பாக வெளிவர வழிவகுத்தவர் திரு.மூ.நடராசா அவர்கள், ஹற்றன்.வா.ஜீ.சூரிச் வங்கி முகாமையாளர். ஆலோசனைகளும் உதவிகளும் வழங்கியவர் கொழும்பு ஞானானந்த சமாசச் செயலாளர் திரு.எம்.பி.நடேசன் அவர்கள். இவ்ஐவரும் பெரும் செயல்வீரர்கள்.*

*எனது பங்களிப்பைப் பாராட்டித் தினகரனில் கட்டுரை ஒன்று தாங்கள் வெளியிட்டதைத் தற்செயலாகப் பார்த்தேன். தங்களைக் கேள்வியுற்றிருக்கிறேன். தங்கள் சகோதரியைச் சென்னையில் சந்தித்தேன். தங்கள் தந்தையார் மலையக மக்கள் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருந்ததை அன்பர் திரு.எச்.விக்கிரசிங்க மூலம் அறிந்தேன். இத்தகைய பெரியாரின் பணிகளை வெளிப்படுத்துவதற்கு இத்தேர்வுகள் உதவியதற்குப் பெரிதும் உவகை அடைந்தேன். அவரைப் பற்றிக் கட்டுரை ஒன்று மலையருவியில் வெளிவந்தமை பாராட்டிற்கு உரியது.*

35 ஆண்டுகள் பல்வேறு வகுப்புகளில் பல்வேறு பாடங்களைக் கற்பித்த ஆசிரியர், எம் ஆர்வத்தாலும் அனுபவத்தாலும் கல்வி அமைச்சு பாடத் திட்டப் பகுதியிலும் தமிழ்ப் பாட நூற் பகுதியிலும் 10 ஆண்டுகள் பணி புரிந்தேன். இன்று நிகழ்ந்து வரும் கல்வித் தமிழ்த் தின விழா எமது காலத்தில் தொடங்கியது. நான்கு ஆண்டுகள் இதற்குப் பொறுப்பாக இருந்தேன். நல்ல முறையில் அனைத்தும் நிகழ்ந்தன. இதனை இணைப் பாட விதான முயற்சியாக அமைத்து வழி நடத்தினேன். இது பெரும் பாராட்டுப் பெற்றது. இதன் பின் தமிழ்ச் சங்கத்தின் தமிழ்த்தேர்வுகளை நடத்தும் பொறுப்பை ஏற்றேன். இவற்றை முன்னைய கல்வி இணைப் பாடவிதான முயற்சியாகவே அனைத்திலங்கையிலும் நடத்தினேன். தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வுகள் இணைப்பாட விதான முயற்சி என்பதை யான் விளம்பரப்படுத்தவில்லை. பிறரும் அறியார். ஆயின் கடந்த ஆண்டு மலையக மாணவர்க்காக நிகழ்ந்த தேர்வுகளில் இருந்து தாங்கள் அறிந்து இதனைத் தங்கள் கட்டுரையில் எழுதியிருக்கிறீர்கள். ஆகவே தாங்கள் சிறந்த கல்வியியலாளர் என்பதை உணர்ந்து தங்களுக்கு எம் நன்றியைப் பாராட்டித் தெரிவிக்க விரும்பினேன். மலையருவியும் சிறந்த தகவல் சாதனம் என்பதையும் எழுதியிருக்கிறீர்கள். மருத்துவ நிபுணர் ஒருவரின் உடல் நிலையையும் உளவியலாளன் ஒருவரின் உள இயல்பையும் ஞானி ஒருவரின் ஆத்மீக இயல்பையும் தெரிவித்தல் போலத் தாங்கள் எமது உள்ளார்ந்த குறிக்கோள்களை இனங்கண்டு தொலைநோக்குச் சாதனம் மூலம் பார்த்துக் சொல்வது போல எழுதியிருக்கிறீர்கள். ஆயிரவர் அறிஞருள் தலையாய ஆற்றல் மிகு அறிஞர் தாங்கள். தங்களுக்கு எமது நன்றி, பாராட்டு. தங்கள் கட்டுரை மேலும் நல்ல பணிகள் செய்ய ஊக்கத்தை தருவதாகும்.

கட்டுரைத் தேர்வும் கவிதைத் தேர்வும் நாங்கள் வேறாக அமைத்தவை. வினாத்தாள்கள் மூலம் 3 மணி நேரத்தில் அமைந்தவை. எமது வினாக்களை மாணவர் அறியார். அவர்களது கட்டுரையில் அவர்களது சுய சிந்தனைகளும் பண்பாட்டு இயல்புகளும் வெளியாகின. பெரும் அறிஞர்கள், சிந்தனையாளர் போலக் கருத்துகளை வெளியிட்டனர். தமது பிரதேசம், சமூகம் பற்றிய பற்றுகளும் இருந்தன. இவை காரணமாகவே மலர் ஒன்றை இந்த ஆக்கங்களை வைத்து வெளியிட விரும்பினேன்.இத்தகைய முயற்சி வரலாற்றில் இச்சங் கத்திற்கே உரியது. இம்மாணவர்களில் பெரும் அறிவாற்றலைப் பார்க்கிறேன். இவர்களை நன்கு வழிப்படுத்த வேண்டும். வருங்காலத்தில் இவர்கள் சமூகத்திற்கும் நாட்டுக்கும் உலகிற்கும் வழிகாட்டுவர். அடிக்கடி இக்கட்டுரைகளையும் கவிதை களையும் படித்து உள அமைதி பெறுகிறேன்.

பல்கலைக்கழகங்கள், உள்ளூராட்சி நூலகங்கள், கல்வி நிலையங்கள், நூலகங்களுக்கு திரு.மூ.நடராசா அவர்கள் அனுப்பினார். அனைவரும் மலையருவியைப் பெரிதும் பாராட்டி எழுதியுள்ளனர். எமக்குப் பல்வேறு பணிகள் உள. கல்விப் பணி சிறந்த உலகப் பணி.

அன்பன்

**தமிழவேள் க.இ.க. கந்தசுவாமி**
**பொதுச்செயலாளர்.**


**தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!**

வாசகர்கள், சந்தாதாரர்கள், விளம்பரதாரர்கள், சஞ்சிகையின் வளர்ச்சிக்கு உதவும் நல்நெஞ்சங்கள், ஆக்க இலக்கியப் படைப்பாளிகள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் பொங்கல் நல்வாழ்த்துக்களைத் 'தாயக ஒலி' தெரிவித்துக்கொள்கின்றது.

# கண்ணகி கலை இலக்கிய விழா–2013

**ஆலையடிவேம்பு அக்கரைப்பற்றில் நடைபெற்ற 'கண்ணகி கலை இலக்கிய விழா - 2013' இன் முதல் நாள் ஜுன் 15 தொடக்க விழாவில் (காலை அமர்வு) 'கண்ணகி கலை இலக்கியக் கூடல்' தலைவர் செங்கதிரோன் த.கோபலகிருஸ்ணன் ஆற்றிய தொடக்கவுரை**

வஞ்சகமில்லாத வாழ்க்கை முறையையும், விருந்திருக்க உண்ணாத வேளாண்மைத் தனத்தையும், வந்தாரை வாஞ்சையோடு வரவேற்று வாழவைப்பதில் வற்றாத மனப்போக்கையும், சாதிமத பேதமற்ற சமரச நோக்கையும், சகோதரத்துவ மனப்போக்கையும் கொண்ட கிழக்கிலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் தனித்துவமான பண்பாட்டு விருட்சத்தின் வேராக விளங்கும் கண்ணகி தொன்மங்களின் அடியொற்றி எழுந்த கண்ணகி கலை இலக்கியங்களைப் பரவலாக்கும் நோக்குடன் 2011 இல் மட்டக்களப்பில் தொடக்கிவைக்கப்பட்ட கன்னி விழாவான 'கண்ணகி இலக்கிய விழா -2011' சென்ற வருடம் மட்டக்களப்பில் புதுக் குடியிருப்புக் கிராமத்தில் 'கண்ணகி கலை இலக்கிய விழா - 2012' ஆக தொடர்ந்து மூன்றாது விழா இன்று அம்பாறை மாவட்டத்தில் ஆலையடி வேம்பு பிரதேசம் அக்கரைப்பற்றில் 'கண்ணகி கலை இலக்கிய விழா - 2013' ஆக முகிழ்கிறது.

ஆலையடி வேம்புப் பிரதேசத்தில் வரலாற்றுப் புகழ்மிக்க பட்டிமேட்டில் 'அக்கரைப்பற்று பனங்காடு பட்டிநகர் அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்' அமைந்திருப்பதும், மேலும், கோளாவில் கண்ணகி அம்மன் ஆலயம் மற்றும் மருதையடி கண்ணகி அம்மன் ஆலயம் ஆகிய இரு ஆலயங்களையும் சேர்த்து மொத்தமாக மூன்று கண்ணகி அம்மன் ஆலயங்கள் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவு எல்லைக்குள் அமைந்திருப்பதும் இம்மக்கள் கண்ணகி தொன்மங்களைப் பேணிப் பாதுகாத்து வருவதற்கான அடையாளங்களே. மேலும், ஆலையடி வேம்புப் பிரதேசம் பல்லினச் சமூகங்களை ஒன்றிணைக்கும் பெருமையும் பாரம்பரியத்தையும் உடையது. இத்தகைய பின்புலத்திலே இவ்வருட கண்ணகி கலை இலக்கிய விழா ஆலையடிவேம்பு பிரதேச மண்ணில் நடைபெறுவது சாலப் பொருத்தமே.

கண்ணகி கலை இலக்கிய விழாக்களை வடிவமைக்கும் பணிக்காக எம்மால் உருவாக்கப்பட்ட 'கண்ணகி கலை இலக்கியக் கூடல்' என்ற பண்பாட்டு நிறுவனமானது.

- உலகமயமாக்கலினாலும் - தகவல் தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சியினாலும் - நுகர்வுக் கலாசாரத்தினாலும் - இயந்திர நாகரீகத்தினாலும் கற்பழித்துவிடாமல் எமது மண்ணின் பாரம்பரியக் கலை இலக்கிய வடிவங்களையும் பண்பாட்டு விழுமியங்களையும் காப்பாற்றி மீளக் கட்டமைத்துப் பேணி வளர்த்தெடுத்து அவற்றை அடுத்த சந்ததிக்கு முறையாகக் கையளிக்கும் பணிகளையும்,
- கிழக்கிலங்கைத் தமிழ் சமூகத்தைப் பண்பாட்டுத் தளத்தில் ஒன்றிணைத்து அவர்களது சமூக, பொருளாதார, அரசியல், கல்வி கலை இலக்கிய மேம்பாட்டை நோக்கி அவர்களை அறிவுபூர்வமாக ஆற்றுப்படுத்தும் அமைதியான செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றது.

கண்ணகி கலை இலக்கிய விழாவானது வெறுமனே விழாகளாக அமையாது சமூக மாற்றத்திற்கான - மறுமலர்ச்சிக்கான விசையாக வெளிக்கிளம்ப வேண்டும்

என்பது எமது வேணவா.

2011 இல் மட்டக்களப்பில் மட்டக்களப்பு அரசடி மகாஜனக் கல்லூரிக் கலை அரங்கில் நடைபெற்ற முதலாவது 'கண்ணகி கலை இலக்கிய விழா' இவ்விழாவில் வெளியிடப் பெற்ற கண்ணகி இலக்கிய விழாப் பட்டயத்திற்கு அமைவாகத் தொடர்ந்து 2012 இல் மட்டக்களப்பு புதுக் குடியிருப்புக் கிராமத்தில் நடைபெற்ற இரண்டாவது கண்ணகி கலை இலக் கிய விழா - இப்போது இங்கு தொடக்கி வைக் கப்பட்டுள்ள மூன்றாவது கண்ணகி கலை இலக்கிய விழா என்பவற்றில் இதுவரை ஐந் நூறிற்கும் மேற்பட்ட போராளர்கள் பதிவு செய்து கொண்டுள்ளனர். மேலும் பதிவு கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்விழாவின் நிறைவுநாளன்று போராளர் களின் எண்ணிக்கை எழுநூறையும் தாண டலாம்.

எதிர்வரும் ஜனவரி மாதம் இவர்களை யெல்லாம் ஒன்றிணைத்துப் 'பேராளர் மாநாடு' ஒன்றினை நடத்தி அம்மாநாட்டில் பல முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துக் கலந்துரையாடித் தீர்மானங்களை மேற் கொண்டு அவற்றிற்கு எதிர்காலத்தில் செயல்வடிவம் கொடுக்கும் நடவடிக்கைக ளைக் 'கண்ணகி கலை இலக்கியக் கூடல்' மேற்கொள்ளவிருக்கின்றது.

நாம் மனங்கொண்டிருக்கும் எதிர்காலச் செயற்பாடுகள் சிலவற்றை இங்கு கோடிட் டுக் கூறுவது பொருத்தம் என எண்ணுகி றேன்.


- முதலாவது கண்ணகி கலை இலக் கிய விழாவில் போராசிரியர் சி.மௌனகுரு அவர்களால் தலைமையுரையில் தெரிவிக் கப்பட்ட யோசனைகளுக்கமைய கிழக்குப் பல்கலைக்கழகம், மற்றும் மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவனம் ஆகிய நிறுவனங்களினூடாக பல்கலைக்கழக இந்து நாகரித்துறையில் கண்ணகி வழிபாட்டு முறைகளை ஒரு பாட நெறியாக ஆக்கவும், தமிழ் மொழித்துறை யில் கண்ணகி இலக்கிய பீடம் ஒன்றினை உருவாக்கி அதன் மூலம் கண்ணகி இலக் கிய ஆய்வுகளை நடாத்தவும், பல்கலைக் கழகத்தில் நாடகமும் அரங்கியலும் பயி லும் மாணவர்களுக்குக் கண்ணகி கலை களைப் பயிற்றுவிக்கவும், சுவாமி விபுலா னந்த அழகியற் கற்கைகள் நிறுவனத்தில் சிலப்பதிகாரம் மற்றும் கண்ணகி வழக்கு ரையில் வரும் ஆடல் பாடல்களை மீளுரு வாக்கம் செய்யவும் ஆவன செய்தல்.
- தமிழறிஞர் குழு ஒன்றின் மூலம் 'கண்ணகி வழக்குரை' காவியத்திற்கு உரை எழுதிப் பதிப்பித்து அதனை மக்களி டையே பரவலாக்குதல்.
- ஏட்டுப் பிரதிகளாக உள்ள கண்ணகி இலக்கியங்களைத் தேடியெடுத்து அச்சில் பதிப்பித்தல் மற்றும் ஏற்கனவே பதிப்பிக்கப் பெற்றவற்றை மீள்பதிப்புச் செய்தல்.
- கலை இலக்கியச் செயற்பாடுக ளோடு மட்டும் நின்றுவிடாமல் எமது சமூ கம் அவாவி நிற்கும் கல்வி, சமூகம் மற்றும் வாழ்வாதாரச் செயற்பாட்டுப் பணிகளை யும் மேற்கொள்ளல். என்பவை அவற்றில் சில.

அடுத்த வருடம் நடைபெறவுள்ள நான் காவது 'கண்ணி கலை இலக்கிய விழா - 2014' இதனைத் தம்பிலுவில் கிராமத்தில் நடத்துமாறு அங்குள்ள ஆர்வலர்கள் பலர் கண்ணகி கலை இலக்கியக் கூடலிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அக் கோரிக்கையினை எமது செயற்குழு பரி சீலனைக்கு எடுக்கும். அத்துடன் அடுத்த வருட கண்ணகி கலை இலக்கிய விழா வில் ஆய்வரங்கின் குவிமையமாக 'கண்ணகி வழக்குரை' விளங்கும்.

நிறைவாக வெகுவிமரிசையாக நடை பெற்றுக்கொண்டிருக்கும் இவ்விழாவின் நெம்புகோலாக நின்று செயற்படும் கண்ணகி கலை இலக்கியக் கூடல்' இன் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும்

அக்கரைப்பற்று விழாக்குழுவின் செயலாளருமன தம்பி செல்வானந்தத்தையும், அவருக்குப் பக்கபலமாக இருக்கும் பொருளாளர் தம்பி சுதர்சனையும், இவர்களுக்கு வேண்டிய ஆதரவளித்து ஆற்றுப்படுத்தும் விழாக்குழுத் தலைவர் நண்பர் கைலாயபிள்ளை அவர்களையும் ஏனைய விழாக்குழு உறுப்பினர்களையும், இன்று வெளியிடப்படவுள்ள விழாமலர் கூடல் பரல் – 2 இற்கான அனுசரணை வழங்கிய அக்கரைப் பற்று பனங்காடு பட்டிநகர் அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய அறங்காவலர் சபையினரையும், மற்றும் விழாவிற்கு வேண்டிய ஏனைய வளங்களையும் மனமுவந்து வழங்கிய நலன் விரும்பிகள் அனைவரையும், பேராதரவு வழங்கிய ஆலையடிவேம்பு பிரதேச மக்களையும் இவ்விடயத்தில் சிலாகித்துப் பாராட்டுவது 'கண்ணகி கலை இலக்கியக் கூடல்' இன் தலைவர் என்ற முறையில் எனது தார்மீகக் கடமையாகும்.


2011இல் ஆரம்பித்து வருடாவருடம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவரும் இக் 'கண்ணகி கலை இலக்கிய விழா'வானது வெறுமனே கூடிக்கலையும் விழாக்களாக இல்லாது இன்று சகல வழிகளிலும் பாதிப்புற்று விரக்தியடைந்துள்ள எமது சமூகத்தை நம்பிக்கையூட்டக்கூடிய இன்னொரு 'புதிய வெளி'க்கு இட்டுச்செல்கின்ற உந்து விசையாக எதிர்காலத்தில் வெளிக்கிளம்ப வேண்டும் என்ற எமது வேணவாவை மீண்டும் வெளிப்படுத்தி அவ்வாறு அமைவதற்கு இங்கு கூடியுள்ள அனைவரது ஆதரவை நாடியும், இன்றைய காலை அமர்வான கூலவாணிகன் சாத்தனார் அரங்கிலே நடைபெற்றுக் கொண்டிருக்கும் தொடக்க விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் முதன்மை அதிதிகள், சிறப்பு அதிதிகள், பேராளர்கள் மற்றும் ஏனைய பார்வையாளர்கள், நிகழ்வுகளில் பங்குபற்றிய வர்கள், ஊடகவியலாளர்கள், கண்ணகி கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவருக்கும் 'கண்ணகி கலை இலக்கியக் கூடல்' இன் சார்பில் நன்றியினையும் வணக்கத்தினையும் நல்கி எனது தொடக்கவுரையை நிறைவு செய்கிறேன். ●



**அவுஸ்திரேலியாவில் 29.11.2013 அன்று நடைபெற்ற ஆசிய பசுபிக் விசேட ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் பங்குகொண்ட கோண்டாவில் சிவபூமி பாடசாலை மாணவர்களான சி.தனுசன், இ.கிரோன் பிளைக்னோ, சி.துஸ்யந்தன் ஆகியோரைத் 'தாயஒலி' வாழ்த்தி மகிழ்கிறது. 200 மீற்றர் ஒட்டப் பந்தயத்தில் வெண்கலப் பதக்கம் வென்ற செல்வன் சி.தனுஷன் பாராட்டுக்குரியவர். இலங்கைக்குப் பெருமை சேர்த்த அவருக்கு எமது நல்வாழ்த்துக்கள்**

**'இணுவில் ஒலி' நடத்திய கட்டுரைப் போட்டியில் மத்திய பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை**

# இயற்கை வளங்களைப் பாதுகாப்போம்




செல்வன் யோ.வினோசன்
(யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)


**"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்."**

நீரும்மண்ணும்மலையும்காடு இணைந்த ஓர் அழகிய ஓவியம் இயற்கையாகும். நம் கண்ணையும் கருத்தையும் கவர்கின்ற வண்ணப் பெட்டகம். எண்ண எண்ண உள்ளத்தைக் களிப்படைய வைக்கும் எழில். இறைவனால் எமக்கு அளிக்கப்பட்ட அதிசயமான, ஆச்சரியமான ஓர் பரிசு. இயற்கையை வர்ணிக்க சொற்களே இல்லை எனலாம்.

மனித தலையீடு இன்றி தன் இயல்பு நிலையில் எமது சூழலில் காணப்படுபவை இயற்கை வளங்களாகும். நம் மனித வாழ்வுக்கு அவசியமான வளம் சேர்க்கும் ஆதாரங்கள் இவை. மனித குலம் இப்பூவுலகில் உயிர் வாழ மனிதனது சக்திக்கு அப்பாற்பட்ட பல அற்புதங்களை இயற்கை நிகழ்த்தி வருகின்றது. நாம் சுவாசிக்கும் காற்று முதல் நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து மூலப் பொருள்களையும் அளிப்பது இயற்கையே!

நீர், காற்று, சுற்றுப்புறச் சூழல், பூக்கள், செடிகள், விலங்குகள், நிலக்கரி, உயிர்ச் சுவட்டு எரிபொருள், வனம், மண்வகைகள், கடல், ஏரி. ஆறு என உயிருள்ளவை யும் உயிரற்றவையும் இயற்கை வளங்களின் கூறுகளே.

இத்தகைய அரிய படைப்புக்களாம் இயற்கை வளங்களின் இயல்புதான் என்ன? மனிதனால் இயற்றப்படாதவை. ஆரம்ப காலம் தொட்டு உலகெங்கும் தானே பரவி இருப்பவை. மனித வாழ் விருப்புக்கு அவசியமானவை. ஆனால் இன்று மனித குலத்தின் ஆக்கிரமிப்பான செயல்களுக்கு உட்பட்டு அழிந்து கொண்டிருப்பவை என இலகுவாகக் கூறிவிடலாம். யானை தன் தலையில்தானே வாரி இடுவது போன்ற செயல்களுக்குக் காரணம் தான் என்ன?

இயற்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்த எமது முன்னோர் இயற்கையைப் போற்றி வாழ்ந்தார்கள். இயற்கையின் ஆற்றலை வியந்து மலையையும் கடலையும் கதிரவனையும் துதித்து வழிபட்டார்கள். மனித வாழ்வே இயற்கையுடன் பின்னிப் பிணைந்து காணப்பட்டது. நம் பண்டையத் தமிழர் தம் வாழ்வோடு இயற்கையை இரண்டறக் கலந்தவர்கள். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலங்களை வகுத்து வாழ்ந்தவர்கள். அவர்கள் வாழ்வு இன்ப வாழ்வாய் அமைந்தது.

ஆனால் இன்றைய மனித குலமோ....... விஞ்ஞானத்தின் அபார வெற்றிக் களிப்பில் இன்பம் கொண்டாடுகிறது. பூமித் தாயின் பாகங்களையெல்லாம் சுரண்டிச் சுரண்டி சுயநலமாய் நடத்துகிறது. சந்திரனில் கால் பதித்துவிட்டு செவ்வாயில் இடம் தேடுகிறது. இவற்றின் விளைவுகள் தான் என்ன?

இயற்கை வளங்கள் யாவும் இயற்கை ஏய்தக் காத்திருக்கின்றனர். மனிதன் தன்னுடைய வரம்பு மீறிய செயல்களால் பூகம்பம், சுனாமி, ஓசோனில் துவாரம். வெப்பமடையும் புவி என பற்பல விளைவு களை அறுவடை செய்திருக்கின்றான். மனிதன் வாழும் சூழல் இன்று அவனுக்கே குழி பறிக்கும் காரணங்கள் பலவற்றைக் கூறலாம். நகராக்கம், கைத்தொழில் மய மாக்கம், உலக மயமாக்கம், சனத்தொகை அதிகரிப்பு, காடழிப்பு, சுரங்க அகழ்வு, விண்வெளி ஆராய்ச்சிகள் எனப் பல ஏதுக் கள் அழிந்து கொண்டிருக்கும் இயற்கை வளங்களுக்கு உரியவை ஆகின்றன.

1972ஆம் ஆண்டிலே தான் ஐக்கிய நாடு கள் சபை முதல் முதலில் உலக சுற்றுப்புறச் சூழல் பற்றிய கூட்டத்தை நடத்தியது. இதி லிருந்து ஒவ்வொரு வருடமும் ஜூன் 5ஆம் திகதி சூழல் தினமாகக் கொண்டாடப்படு கிறது. கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் அவசியமற்றது. என்பதை மனிதகுலம் உணரவேண்டும். விழிப்புணர்வு பெறவேண் டும். இதில் தேசங்களின் அரசுகள் கூடிய கவனம் செலுத்த வேண்டும். தியோடர் ரூஸ்வெல்ட் என்ற அமெரிக்க ஜனாதிபதி போல இயற்கை வளங்களின் சுரண்ட லுக்கு நாட்டின் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்.

பூமித் தாய்க்குப் பழைய எழிலை எம் மால் கொடுக்க முடியாவிட்டாலும் குப் பைத் தொட்டியாக்காமலாவது, இருக்க லாமே! இதற்கு நாம் வளங்களை சிறப் பாக கையாள வேண்டும். கழிவுகளைக் குறைத்தல், மறுசுழற்சிக்குட்படுத்துதல், வளங்களை மீண்டும் பயன்படுத்துதல், வளங்களை மீட்டல் ஆகிய செயற்பாடு களை இன்றைய உலக நாடுகள் கருத்திற் கொள்கிறமை குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, இயற்கையை ஓவியமாய் இரசிப் போம். வீணையாய் மீட்டுவோம். நண்பனாய் நேசிப்போம். இன்ப வாழ்வு பெற்றிடுவோம்.

# என்றும் மறையாத பேராசிரியர் க.கைலாசபதி



ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் கைலாசபதியின் தடம் மிகவும் ஆழமாகப் பதிந்துள் ளது. இலங்கையில் இருபதாம் நூற்றாண்டில் உருவாக்கிய பல்துறை சார்ந்த அறிஞர் களில் பேராசிரியர் க. கைலாசபதி தலைசிறந்த மாக்சிச அறிஞராகத் திகழ்ந் தார். அவர் நாற்பத்தியொன்பது (1933 - 1982) ஆண் டுகள் மட்டுமே உயிர் வாழ்ந்தார். தனக்குக் கைவரப் பெற்ற ஆற்றல் ஆளுமை முழுவதையும் மார்க்சிய தத்துவார்த்த உலக நோக்கின் ஊடாக வளப்படுத்தி முன்னெடுத்தார். பொதுவாகத் தமிழ் இலக்கியத் துறையிலும் குறிப்பாக ஈழத்து இலக்கியப் பரப்பிலும் கல்வி, சமூக, அரசியல் தளங்களிலும் அவர் வழங்கிச் சென்ற சமூகப் பங்களிப்பானது காலத்தால் அழியாச் செல்வமாகும்.

அவர் ஈழத் தமிழ் இலக்கியத்துக்குரிய தனியான தன்மையை எடுத்துக்காட்டியதோடு இயங்க வேண் டும் என வலியுத்தி வந்தார்.

கைலாசபதி மனிதரது சமூகச் செயற்பாடு சிறப்ப தற்கு அமைப்புக்களதும் கட்டுப்பாடான நடத்தையின தும் முக்கியத்துவத்தை ஏற்று வற்புறுத்திக் கடைப் பிடித்தும் வந்தவர். பத்திரிகை ஆசிரியராகவும் பல் கலைக்கழக ஆசியராகவும் வளாகத் தலைவராகவும் அவர் சிறப்பாகச் செயற்படுவதற்கு அந்தந்த அமைப் புகளின் விதிமுறைகளுக்கமையவும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கும் அப்பாற்பட்டு கடமைகளை ஆற்றி யமை முக்கியமான பங்களிப்பாகும்.

அவர் எப்போதும் ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கத்தி லேயே நின்றார். அவர்களது போராட்டங்களை ஆத ரித்தார். பரந்த நோக்கில் அவரது சமூகப் பார்வையும் தேசிய, சர்வதேசிய அரசியல் விவகாரங்கள் பற்றிய பார்வையும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவான மார்க் சியப் பார்வையே. தமிழ்த் தேசியம் தொடர்பில் மிகத் தெளிவான ஒரு நிலைப்பாட்டை அவர் எடுத்திருந்தார் என்பதை அவரது கட்டுரைகளின் வழி அறிய முடியும். கைலாசபதியின் அரசியல் கட்டுரைகளில் இழையோ டும் அங்கதச் சுவையும் சம்பவங்களை அவர் விவ ரிக்கின்ற விதமும் அழகானவை. இவை வாசகனை வாசிக்கத் தூண்டுபவை. பத்திரிகைகளில் வராத செய்திகளை தனது விமர்சனக் கண்ணோட்டத்தில் அவர் எழுதுவார். அவர் எழுதுகிற செய்திகளே விமர்ச னங்களாக இருக்கும்.

## நூல் நயவுரை

த.சிவா




நூல் : **இணையிலி**
(சீர் இணுவைத் திருவூரின் வாழ்வும் வளமும்)

ஆக்கம் : **கலாபூஷணம் மூ.சிவலிங்கம்**

வெளியீடு : **இணுவில் சைவத் திருநெறிக் கழகம்**

விலை : **ரூ. 1000/=**

ஈழவளத் திருநாட்டின் சிரசாக நிமிர்ந்து நிற்கும் யாழ்ப்பாணம். அங்கு இணையில் லாப் பெருமையினை எடுத்தியம்பும் திரு வூராம் இணுவில். சைவமும், தமிழும் கோலோச்சும், தரணி புகழ் தனித்துவம் மிக்க, சிறப்புக்குரிய இணுவையூரைப் பற் றிய வரலாற்று ஆவணமாக, தகவல் களஞ்சியமாக 'இணையிலி' என்றும் நூல் வெளிவந்து, மணம் பரப்பி நிற்கின்றது. ஒரு கிராமத்தைப் பற்றிய ஆவணம் என்ற வகையில் அந்த மண்ணில் பிறந்தவர்கள் யாவரும் பெருமை கொள்ளும் வகையில், சிறப்புமிகு பொக்கிஷமாக உலா வந்துள் ளது.

'சீர் இணுவைத் திருவூர் என்ற மகு டத்தில் 2004 ஆம் ஆண்டு ஒரு சிறப்புமிகு நூலை வெளிக்கொணர்ந்த ஓய்வுநிலைக் கிராம சேவையாளர் மூ.சிவலிங்கம் அவர் கள் சமய, சமூக, கல்வி, இலக்கியப் பணி களுக்குத் தம்மை அர்பணித்து ஓயாது இயங்கிக் கொண்டிருக்கும் ஒப்பற்ற மூத்த குடிமகன் என்ற வகையில் பெருமைக்குரிய வராகின்றார். அத்தகைய பெருமகனார் நீண்டகாலப் பெருமுயற்சியினால் தேடிப் பெற்ற பொக்கிஷங்களை முறையாக, சிறப் பாக, நிதானமாக, அறிவுபூர்வமாக, அவதா னத்துடன் 'இணையிலி' என்னும் ஆவண மாக முன்வைத்துள்ளார்.

"இணையிலி என்று பொருள்படும் நம் இணுவில் கிராமத்தின் சிறப்புக்களை மேலும் விரிவாக மக்கள் எல்லோரும் பெரு மைப்படும் விதத்தில் ஆசிரியர் கலா பூஷணம் திரு. மூ.சிவலிங்கம் அவர்கள் ஆக்கியிருக்கின்றார்கள். எழு இயல்களில் நம்முன்னே படம்பிடித்துக் காட்டும் முயற் சியில் அவர் வென்றிருக்கிறார் என்றால்

அது மிகையாகாது" என்று சிவஸ்ரீ தா.மகா தேவக்குருக்கள் அவர்கள் தமது ஆசியு ரையில் தெளிவுபடுத்தியுள்ளார்.

"இறையருள் நிறைந்த இனிய திருவூர். இப்புண்ணியபூமி பற்றி இனிய நூல் வெளிவருவது அறிந்து ஆனந்தமடைகி றேன். மூதறிஞர் கலாபூஷணம் உயர்திரு. மூ.சிவலிங்கம் அவர்களின் அயராத முயற் சியால் வெளிவரும் 'இணையிலி' என்ற நாமம் கொண்ட இணுவில் ஆவண நூல் மிகவும் பயன்தரும் என்பதில் ஐயமில்லை. ஊர்ப்பற்றும், உயர்ந்த சிந்தனையும் ஓய் வில்லாத அர்ப்பணிப்பும் கொண்ட மனிதர் களைச் சந்திப்பது மிகவும் கடினமான காலத்தில் இவரது தொண்டு காலம் உள்ள வரை காத்திரமாக நினைத்துப் போற் றக்கூடிய பணியாகக் கருதவேண்டியது எம் கடனாகும்." என்று செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தமது ஆசியு ரையில் முன்வைத்துள்ளார்.

"அந்தணர் கவிஞர் கலைஞர் அறிஞர்
வீரமணி ஐயர்,
சிந்தனை தவிலின் மேதை
தட்சிணாமூர்த்தியோடு
பந்தமில் வடிவேற் சுவாமி பண்ணிசை
கந்தையாவும்
விந்தையாம் நடனஞ்செய்த சுப்பையா
வையும் இந்நூலிற் கண்டேன்."

என்கிறார் முதுபெரும் புலவர் கலாபூஷ ணம் புலவர்மணி வை.கா.சிற்றம்பலம்.

"கிராமப் பதிவுகளை மேற்கொள்ளல் ஒரு தொடர் செயல்முறை, இயங்குநிலை யிலே கிராமத்திலே புதிய புதிய வளர்ச்சி கள் தோன்றிய வண்ணமிருக்கும்; புதிய ஆளுமைகள் வளர்ந்த வண்ணமிருக்கும்; மாற்றங்கள் நிகழ்ந்தவண்ணமிருக்கும். கிராமப் பதிவுகள் முக்கியமானது. கிராமப் பதிவுகளில் முக்கியமான இன்னொரு பரி மாணம் அதன் சமூக இயங்கியல், சமூக அடுக்கமைவும், விளிம்பு நிலை மக்களும் அசைவியக்கங்களும் (Mobility) தொடர்ந்து இடம்பெற்றவண்ணமுள்ளன. அவற்றைத் தரிசிப்பதற்குரிய ஆதாரத் தகவல்கள் முக் கியமானவை. இந்நூலை வாசிக்கும்போது பல்வேறு தரிசன விதானங்கள் மேலெழு கின்றன" என்று பேராசிரியர் சபா ஜெய ராசா தமது அணிந்துரையில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

"வரலாற்று நூல்கள், தகவல்களை இலகுவாக அறிந்துகொள்வதற்குத் தக்க விதத்தில் அமைந்திருக்கவேண்டியது முக்கியமாகும். இந்த முக்கியத்துவத்தை நன்குணர்ந்து இந்தநூல் அமைக்கப்பட்டி ருப்பது தனிச்சிறப்பு எனலாம். இது நூலா சிரியரின் நுண்மதிக்கும், அனுபவத்திற்கும் எடுத்துக்காட்டாகும். இணுவில் திருவூர் பற்றிய ஏறக்குறைய 150 ஆண்டு காலப் பாரம்பரிய வரலாறுகளைத் தொகுத்தும் வகுத்தும் 'இணையிலி' என்னும் பெயரில் வெளிவரும் இந்நூல் காலத்தின் தேவையை நிறைவுசெய்யும் பயன்தரு நூல் என்பது குறிப்பிடத்தக்கது" என்று சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் தமது மதிப்புரை யில் மதித்துள்ளார்.

பல்துறை ஆற்றல் படைத்த வல்லுநர் களின் கருத்துக்களை மனதில் நிறுத்திக் கொண்டு நூலாசிரியரின் முன்னுரையை நோக்குகின்றேன். அகவை எண்பதைத் தாண்டிய நிலையிலும் மனந்தளராது, எடுத்த பணியைச் சிறப்புடன் நிறைவேற் றிய வகையில் அவரை வாழ்த்தி மகிழ்கின் றேன். "ஒரு கிராமத்தின் வரலாற்றை முழு மையாகத் தவறில்லாமல் எழுவது சிரமம். இதுவரை எவரும் செய்ய முன்வராத போதும் எனது முதுமைக் காலத்திலும் எழுத உணர்த்திய இறையருள் எதிர்காலத் தவரின் தேடுதலுக்கான சிறுதுரும்பாக வேனும் அமைய வேண்டுமென்ற அவா வில் இதனை ஆவணமாகத் திரட்டினேன்" என்ற நூலாசிரியரின் கூற்றை அவரின் பெருந்தன்மையின் மதிப்பீடாகக் கொண்டு எனது நூல் நயவுரையை முன்வைக்க லாம் என எண்ணுகின்றேன்.

'இணையிலி' என்ற இந்த நூல் ஏழு

இயல்களாக வகுக்கப்பட்டு, ஒவ்வொரு இயலுக்குமுரிய தனித்துவத் தன்மையோடு அறிந்த, தெரிந்த விடயங்கள் முன்நிறுத் தப்பட்டுள்ளன. சில விடயங்கள் ஆழமாக வும் வேறு சில விடயங்கள் சுருக்கமாகவும், சில தகவல்கள் பட்டியலாகவும் அமைந் திருப்பதை அவதானிக்க முடிகிறது. தேடிப் பெற்றுக்கொண்ட படங்கள் நூலுக்குக் கனதியைக் கொடுத்துள்ளது. எந்த வகை யில் இந்த நூலை நோக்கினாலும் அதற் குள் ஒரு பெறுமானம் இருப்பதை எவருமே மறுக்க முடியாத நிலையில் அது உரு வாக்கப்பட்டுள்ளது.

சமய இயல், கல்வி இயல், கலை இயல், வாழ்வாதார இயல், சிறப்பியல், தொன்மை இயல், நிறைவியல் என்று ஏழு இயல்களில் சீர் இணுவைத் திருவூரின் வாழ்வும் வள மும் சொல்லப்பட்டுள்ளன. சமய இயலில் இணுவிலிலுள்ள ஆலயங்கள், அங்கு வாழ்ந்த சித்தர்கள், அருளாளர்கள், அந்த ணப் பெரியார்கள், சமயப் பணி செய்த பற் றாளர்கள் பற்றிய பல சிறப்புமிகு தகவல் கள் இடம்பெற்றுள்ளன.

இரண்டாவது பகுதி கல்வி இயல் பற்றிக் கூறுகின்றது. கல்விக்கூடங்கள் பற்றியும், கல்வி மேம்பாட்டுக்காக உழைத்த பெரு மைக்குரியவர்கள், மற்றும் மதிப்பார்ந்த கல்விமான்கள், கல்விப் பாரம்பரியக் குடும் பத்தினர்கள் மற்றும் ஈழத்து இலக்கியப் பரப்பில் முகிழ்ந்து நிற்கும் இலக்கியப் படைப்பாளிகள் ஆகியோரைப் பற்றிய பல வகைப்பட்ட தகவல்கள் முன்வைக்கப்பட் டுள்ளன.

மூன்றாவது பகுதி கலை இயலாக மலர்ந்துள்ளது. இசை பற்றியும், இசைக் கருவிகள் பற்றியும், வாத்தியங்கள் பற்றி யும் எடுத்துக்கூறுவதோடு நடனம், கூத்து, வில்லிசை, நாடகம் போன்ற கலைகளைப் பற்றியும் விவரமாகத் தெரிவிக்கப்பட்டுள் ளமை சிறப்பான அம்சமாகும்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்ற பாரதியாரின் மகுட வாச கங்களைத் தாங்கி வாழ்வாதார இயல் முன்வைக்கப்பட்டுள்ளது. விவசாயம், கைத் தொழில், மருத்துவம், சோதிடம், கூட்டுறவு ஆகிய செயற்பாடுகளுடன் தொடர்புடைய பல்வேறுபட்ட விடயங்கள் வாழ்வாதார இயலில் உள்வாங்கப்பட்டுள்ளன.

ஐந்தாவது இயல் சிறப்பியலாகப் பரந்து நிற்கின்றது. இணுவையூரின் பெருமையை உணர்த்திய நான்கு சிறப்புகள், கல்வியை அலங்கரித்த சான்றோர்கள், பிரமுகர்கள், வங்கியாளர்கள், பெருமைபெற்ற பெண் கள் உட்பட பொது நிறுவனங்கள் ஆற்றும் பணிகள் பற்றிய தகவல்களும் இவ்வியலில் விவரிக்கப்பட்டுள்ளன.



தொன்மை இயலில் இணுவில் மக்க ளின் பண்பாட்டுக்கோலங்கள் உள்ளடக்கிய பலவகையாக தகவல்களும், அன்றைய பாவ னையிலிருந்தன பொருட்கள், பழமைக்குச் சான்றான கட்டடங்கள், பெண்களின் வாழ் வியல் கூறுகள் போன்ற பலவகைப் பரிமா ணங்களையும் இந்த இயல் கொண்டுள்ளது.

நிறைவியலில் மறக்கமுடியாத சில வரலாறுகள், பணிகளால் சிறப்புற்றோர், உசாத்துணை நூல்கள். நன்றிக்குரிய வர்கள், உறவுகளும் தொடர்புகளும், புதிய பரம்பரையினர், வாழ்வோடு சேர்ந்த நிலைப்பாடுகள் போன்றன உள்ளடக்கப் பட்ட அதேவேளை, இணுவையூரின் பெரு மையை உலகறியச் செய்த 'இணுவில் ஒலி' பற்றிய சிறப்புமிகு அம்சங்களும் இடம்பெற்றுள்ளன.


இணுவையூருக்கு மகுடம் வைத்த வர லாற்று ஆவணம், வரலாற்றுப் பொக்கிஷம் என்று பெருமையாகச் சொல்லத்தக்க 'இணையிலி' என்னும் இந்நூல் இணுவில் மண்ணில் பிறந்த ஒவ்வொருவர் இல்லங் களிலும் இருந்து மணம் பரப்புவதுடன் வருங்காலச் சந்ததியினருக்குப் பயன்படும் வகையில் பேணிப் பாதுகாக்கப்படவேண்டிய அரும்பெரும் செல்வமாகும். ஆசிரியரின் அரும்பணி அரியாசனம் ஏறி நிற்கின்றது.

# T A Construction Services (Pvt) Ltd

**(General Hardware Merchants)**





348, GALLE ROAD, COLOMBO - 06

TEL: 011 236 1491, 011 236 1857



செல்வராஜா கோல்டு ஹவுஸ் இன் 12 வது
ஆண்டு நிறைவை முன்னிட்டு அனைவருக்கும்
எங்களது மனமார்ந்த நன்றிகளை
தெரிவித்துக் கொள்வதுடன்
தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களையும்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
செல்வராஜா
கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்
£2000 மேல் நகைகள் கொள்வனவு செய்பவர்களுக்கு
£100 பெறுமதியான Gift Voucher FREE
£1000 மேல் புடவை கொள்வனவு செய்பவர்களுக்கு
£200 பெறுமதியான Gift Voucher ம் முற்றிலும்
இலவசம்
£100 மேல் புடவை கொள்வனவு செய்பவர்களுக்கு
நகைகள் அனைத்தும் £259 மட்டுமே
* Terms & Conditions apply
Selvaraja Gold House & Textile
Exclusive Designer Jewellery & Sarees
162 B, Mitcham Road London SW17 9NJ
Tel : 020 8767 3795 | 07825 005 269



Jeyanjali
International (UK)
சிவசிவ
ஜெயாஞ்சலி
இன்டர்நேசனல் (UK)
ஜெயாஞ்சலி இன்டர்நேசனல் (UK) நிறுவனத்தின்
நடன வகுப்புகள்
ஆரம்பம்
நடன ஆசிரியர்
நாட்டிய கலைமணி
S.பிரதீஸ்குமார் M.Dance, MS, BFA
Contact : 07832979102 - 07549428425 ❖ e mail : jeyaint@gmail.com
Supperted by: Kàlai Kàviri Collegiate Arts(UK)

# Kulendran Immigration Law Chambers



(அங்கீகார எண் : F200100055)

## 19வது ஆண்டு சேவை

**குடிவரவு விண்ணப்பங்கள் / குடிவரவு மேன்முறையீடுகள் மற்றும் சகலவிதமான குடிவரவு தேவைகளுக்கும்.**

- நாடு கடத்தலுக்கு எதிரான மேன்முறையீடுகள்
- பிரித்தானிய குடியுரிமை விண்ணப்பங்கள்
- உங்கள் உறவினர்களை வரவழைத்தல்
- சகலவிதமான விசா நிராகரிப்புக்கு எதிரான மேன்முறையீடுகள்
- Bail Application
- Asylum Appeals
- Human Rights Application / Appeals

"லண்டன் பல்கலைக்கழக / கல்லூரிகளுக்கான அனுமதிகள் / விசா நீடிப்புக்கள் / Prospective Student Visa விண்ணப்ப ஆலோசனைகள்"

**Tel No: 020 8542 8222/ 020 8682 4494**
**Fax No : 020 8542 8666**
**Mobile : 07769185592**
**E-mail : kilc_work@yahoo.co.uk**

OISC

**90, High Street,**
**Colliers Wood**
**London**
**SW19 2BT**


Since 1986
Rabeena
We've Mastered Taste
2014
அன்பார்ந்த ஏக இறக்குமதியாளர்கள்,
விநியோகஸ்தர்கள், மற்றும்
வாடிக்கையாளர்களுக்கு
இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
CURRY POWDER
MIXTURE
Rabeena Food (Pvt) Ltd
90, Reclamation Road, Colombo - 11, Sri Lanka.
Tel: 94-11-2336602/03, Fax : 94-11-2332997
E-mail : info@rabeena.com Web Site : www.rabeena.com




சிவராம் பதிப்பகம், 20(32), கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 221 9440